பொன்னி





பொன்னி

மாதம் இருமுறை

ஆசிரியர்: முருகு சுப்பிரமணியன்

க

பொருளடக்கம்

மலர் 3 இதழ் 3

பாணன்
ஆண்டி
நக்கீரன்
விசு. திருநாவுக்கரசு
நாரா நாச்சியப்பன்
தில்லை வில்லாளன்
நா. கணேசன்
மு. அண்ணாமலை
வழிப்போக்கன்
நா. வேத்தரசன்
சிப்பி
உமாமணி

ஆகியோரின் எழுத்தோவியங்கள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 மாசித் திங்கள் 27-ம் நாள்

விலை அணா 5
10—3—49

செய்திப் பாட்டு

பணத்திட்டப் பட்டியல் பாரீர்!

தோழரே, அரசாங்கம் பாரீர்!—சென்னை
தோற்றிய பணத்திட்டப் பட்டியல் பாரீர்!
பட்டியல் பாரீர்!
தோழரே!......

நாட்டினில் நல்லதே செய்வோம்—என்றே
நாவூறத் தேனூறும் சொற்களைத் தந்தார்
சொன்னவர் வந்தார்

ஆட்சியில் தாம்செய்த தென்றே—அவர்
ஆளுகை ஒட்டத்தின் செலவெல்லாம் சொல்வார்
வரவெல்லாம் சொல்வார்
தோழரே!......

நான்குகோடி தொகை துண்டாய்—அவர்
நாடிடும் பொருளாகும் எதிர்காலத் தேவை
எதிர்காலத் தேவை

தான்கண்ட தேவைக்கு நேராய்—வாழ்வைத்
தேய்க்கும் வரிபோடல் அவர்செய்யும் சேவை
அரசாங்கச் சேவை
தோழரே!......

மிட்டா மிராசுகள் வாழ்வில்—சர்க்கார்
மேவிடும் சட்டமே குறைவை ஒழிக்கும்
நிறைவைத் தெளிக்கும்

கொட்டிடும் வேர்வை கொள்உழவர்—வாழ்வின்
குறையதைப் போக்கிடில் நாடு செழிக்கும்
செல்வம் கொழிக்கும்
தோழரே!......

—"பாணன்"



அம்பேத்கார் மசோதா

டாக்டர் அம்பேத்காரின் நல்லெண்ணமும் அரிய முயற்சியும் தந்த விளைவின் பயனாக டில்லிபாராளு மன்றத்தில் இந்து சட்டத்திருத்த மசோதா என்பதாகச் சீர் திருத்தச் சட்டம் ஒன்று கொண்டுவரப்பட்டு, விவாதம் நடைபெற்றுவருகிறது.

இளமை மணத்தடை, உடன் கட்டை ஏறுதலை ஒழித்தல் போன்ற சீர்திருத்தங்களுக்கு அடுத்த படியாக இம்மசோதாவை வைத்தெண்ணலாம். முற்போக்குலகம் எதிர்பார்க்கும் அளவு இம்மசோதாவின் நோக்கங்கள் இல்லையென்றாலும், இந்துக்களிடையே நிலவி வரும் சாதி வேற்றுமையை ஆட்டங்காண வைக்கும் அளவுக்குச் சட்டம் இடங்கொடுக்கிறது. எந்தச் சாதியைச் சேர்ந்தவனும் எந்தச் சாதியைச் சேர்ந்த பெண்ணையும் திருமணம் செய்துகொள்ளலாம். இச்சட்டம இத்திருமணத்தை ஏற்றுக் கொள்கிறது. அதே போன்று பிள்ளை கூட்டிக்கொள்ளும் திட்டத்திலும் எந்தச் சாதியிலும் பிள்ளையைத் தேடித் தனக்கு வாரிசாக ஆக்கிக் கொள்ளலாம். இச் சீர்திருத்தத்தையும் இச்சட்டம் அனுமதிக்கிறது. அதற்கெல்லாம் மேற்பட்டுப் பெண்களுக்கும் தகப்பனாரின் சொத்தில் ஆண்களைப் போன்று சமபங்குண்டு என்பதை இச் சட்டம் வலியுறுத்துகிறது. இப்பகுதிதான் 'புரட்சிகரமானது' என்று சொல்லத்தக்க சிறப்புடையது. அடுத்து ஏகதார முறையை வற்புறுத்தியும், திருமண ரத்தைச் சில சந்தர்ப்பங்களில் அனுமதித்தும் இச்சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த ஏற்பாடுகள் நெடுநாட்களின் முன்னரே சட்டமாக்கப் பெற்றிருக்க வேண்டுமென்றுதான், காலப் போக்கை உணரும் ஆற்றலுள்ளவர்கள் கூறுவார்கள். இந்து சமுதாயத்தில் பெண்கள் வகித்துவரும் அவல நிலையை மாற்ற உதவுகிறது இச்சட்டம் என்ற காரணத்

தினால், பெண்களிடமிருந்து நிறைய ஆதரவு, இதற்குக் கிடைத்திருக்கிறது. டில்லி பாராளுமன்றத்திலே பேசிய உறுப்பினர்களிடையேயும் பெண்களெல்லாம் டாக்டர் அம்பேத்காரை ஆதரித்தே பேசியிருக்கின்றனர். 'நேர்மையும்நீதியும் தேவை' என்றுணரும் ஆடவர்களும் டாக்டரின் மசோதாவை வரவேற்றே பேசியிருக்கின்றனர். மேலும் டாக்டர் அம்பேத்கார் இம்மசோதாவை முன்மொழியும்போது "இந்து சமுதாயம் என்னும் கட்டிடத்தின் பாழடைந்த பகுதிகளைச் செப்பனிடும் வேலையே இது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

ஆனல், "இம்மசோதாவினால் இந்து மதத்திற்கு ஆபத்துச் சூழ்ந்து விட்டது" என்றும், "இந்துமத சம்பிரதாயங்கள் மாண்டு மடிந்துவிடப் போகின்றன" என்றும் கூக்குரல் எழுப்புவர்களும் இல்லாமலில்லை. அண்மையில் சென்னையில் ஓமந்தூரார் கொண்டுவந்த இந்து அறநிலைய மசோதாவினை யார் யார் எதிர்த்தார்களோ, அவர்களே, அவர்களின் மறுபதிப்புகளே டில்லி மசோதாவையும் எதிர்க்கிறார்கள். நம் நாட்டுச் "சுதேசமித்திரன்" "இந்து" வகையினரும் இம்மசோதாவை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியிருக்கின்றனர்; நல்லவேளையாகச் சத்தியானந்த சரசுவதியார் தம் உண்ணாவிரதத்தை டில்லியில் தொடங்கி விடவில்லை. ஆனால் மற்ற ஏற்பாடுகளெல்லாம் நடைபெறுகின்றன. "அகில இந்திய இந்துச்சட்ட மசோதா எதிர்ப்புக் கமிட்டி" என்பதாக ஒரு கமிட்டி டில்லியில் முகாம் போட்டிருக்கிறது; அங்கே இந்துமதத்தைப் புனருத்தாரணம் செய்யும் வீரர்கள் நாடெங்கிலுமிருந்து கூடியிருக்கிறார்கள்.

இத்தகையவர்கள் இம்மசோதாவை எதிர்க்கும்போது இச் சட்டசபைக்குப் போதிய அதிகாரமில்லையென்பதாகவும், காங்கிரஸ்காரர் தேர்தலின் போது இதனைக் கூறி ஓட்டுப்பெறவில்லை யென்பதாகவும், மத சம்பிரதாயங்களில் தலையிடக் கூடாதென்பதாக இந்திய அரசியல் திட்டத்தில் உரிமைகள் வகுக்கப் பட்டிருப்பதாக எடுத்துக் காட்டியும், இந்துமதமே இச் சீர்திருத்தங்களால் அழிந்து விடும் என்று ஓலமிட்டும் காரணம் காட்டி வருகிறார்கள். கூர்ந்து கவனிப்போர்க்கு இக்காரணங்கள் சப்பையானவை என்பது எளிதில் புலனாகிவிடும். இந்திய அரசியலையே திட்டமிடும் சட்டசபைக்கு இச் சிறு சீர்திருத்தங்களைச் செய்ய அதிகாரமில்லையென்பது கேலிக் கூத்தேயாகும்; தேர்தல் வாக்குறுதியில் இச்சீர்திருத்தம் குறிப்பிடப் படவில்லை என்பதும்,

காங்கிரஸ் ஆட்சியினர் மேற்கொள்ளும் எத்தனையோ திட்டங்களைப் பார்க்கும் போது, நிலைநிற்க வழியில்லை. “இந்துமத சம்பிரதாயங்களில் தலையீடு” என்னும் குற்றச் சாட்டு பொருளற்றது. பாகிஸ்தானிலிருந்து ஓடிவரும் அகதிகள் இந்துக்கள் என்ற காரணத்திற்காக இந்திய அரசினரின் செல்வம் பத்துக் கோடி, பதினைந்து கோடி செலவழிக்கப் பெறும்போது, இந்து சமுதாய சீர்திருத்தம் செய்ய மட்டும் அவர்கட்கு உரிமையில்லையென்று கூறுவது வெட்கக்கேடாகும். ‘இந்து மதமே அழிந்து போகும்’ என்பார் உரைக்கு மருந்தாகத்தான் ‘இச்சீர்திருத்தங்கள் செய்யாவிட்டால் இந்துமதம் அழிந்துதான் போகும்’ என்பதாக அம்பேதகார் கூறியதை நாம் குறிப்பிடலாம்.

நாட்டு மக்களின் நல்வாழ்வுக்குத் தேவையான திருத்தங்களுடன் வருகின்ற இம்மசோதாவை முழுமனத்துடன் நாம் வரவேற்கிறோம்; பழமைப் பித்தர்கள் தவிர மற்ற அனைவரும் இதனை வரவேற்கத்தான் செய்வார்கள்; விரைவில் இம்மசோதாபற்றிய விவாதம் முடிந்து சட்டம் உருப்பெற்று, இத்திட்டங்கள் நடைமுறைக்கு வர வேண்டுமென்பதே நம் ஆவல்.



காலமும் கருத்தும்

கவிக் குயில் மறைவு


ஐக்கிய மாகாண கவர்னராக விளங்கிய சரோஜினி அம்மையார், தம் எழுபதாம் வயதில் மாரடைப்பின் காரணமாகக் காலமானார் என்ற செய்தி கேட்டு இந்தியர் அனைவருமே துயருற்றனர். அம்மையார் அவர்களின் வாழ்க்கைச் சிறப்பும், குறிக்கோளுயர்வும் இந்தியப் பெண்கள் பின்பற்றக் கூடியனவாகும். சீர்திருத்த நோக்கம் கொண்ட அம்மையார் கலப்புமணம் புரிந்து கொண்டு தம் சொல்லைச் செயலில் காட்டினார். இந்திய விடுதலைப் போரின் ஒவ்வொரு கட்டத்திலும் அம்மையாரின் தொண்டு இணைந்தே யிருந்திருக்கிறது. உலகப் புகழ் பெற்ற உத்தமர் காந்தியாரின் உறுதுணைவராக, அம்மையார் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். நாட்டுக்காகத் தியாகங்கள் புரிவது என்பதிலும் அவர்கள் இந்தியத் தலைவர்களின் முன்னணியிலே முதன்மை பெற்று வந்திருக்கிறார்கள்; அத்துடன் பெண்கள் வகிக்க வேண்டிய அத்தனை உயர்வான பதவிகளையும் பெற்றுச் சிறக்க நிர்வாகம் செய்திருக்கிறார்கள். அம்மையார், அரசியலில் மட்டுமல்ல, இலக்கிய உலகிலும் மறையாத பெரும் புகழ் பெற்றிருக்கிறார்கள். உலகம் முற்றுமே அம்மையாரைக் "கவிக் குயில்" என்று அழைக்கிறது. அவர் தம் கவிதைகள் அத்தகைய சிறப்பு வாய்ந்தவை. இவ்வாறு பெருநிலையில் மிளிர்ந்த அம்மையாரை ஐக்கிய மாகாண கவர்னராக இந்திய ஆட்சியினர் நியமனம் செய்து பெருமைப்படுத்தினார்கள். அம்மையார் மறைவு துக்கப்பட வேண்டியதொன்றாகும்; அவர் தம் குடும்பத்தினர்க்கு நம் ஆறுதல் உரியதாகும்.



பர்மா நிலை

விடுதலை பெற்ற பர்மா, உலகினரின் கண்களுக்கு முன் வீறு பெற்று விளங்கும் என நாம் எதிர்பார்த்தோம; ஆனால் அங்கே நடைபெறும் கலவரங்களும், போராட்டங்களும், நாச வேலைகளும் பர்மாவைப் பற்றி உலகம் துச்சமாக எண்ணும்படி செய்துவிட்டன என்றே கூற வேண்டும். பர்மிய அர

சினருக்கு நாட்டில் பல முனைகளில் எதிர்ப்பு இருந்து வருவதே இக் குழப்பத்திற்குக் காரணமாகும். கரீன்கள் தனி நாட்டுக் கோரிக்கையை முன் வைத்துக் குழப்பம் விளைவித்து வருகின்றனர். கம்யூனிஸ்டுகள், சோஷலிஸ்டுகள் ஆகியோரும் இக் குழப்பம் வளர்ச்சியுற்று, அரசாங்கம் திண்டாட வேண்டுமென்ற நோக்கத்துடன் கரீன்களுக்கு உதவி செய்கின்றனர். இவ்வாறு பர்மா சர்க்கார் பெயரளவில் பர்மா சர்க்காராக இருக்கிறதே ஒழிய, கரீன்கள் ஆட்சியில் பர்மாவின் பல பகுதிகள் வந்திருப்பதாகக் கூறப்படுகிறது. பர்மிய ஆட்சி போதிய வலுவுள்ளதாக விளங்கவில்லை. சட்டமும் அமைதியும் நிலை பெற உதவ வேண்டிய போலீஸ் ராணுவத் துறைகளில் பணிசெய்த பலர் எதிர் முகாம்களில் சேர்ந்துவிட்டால் எப்படி அமைதி ஏற்படும்? இத்தகைய திண்டாட்ட நிலையில் பர்மா சர்க்கார் அவதியுறுகிறது. புதுடில்லியில் நேரு சர்க்காரின் முயற்சியால் கூடிய மாநாடு முடிவு செய்த திட்டத்தைப் பர்மா சர்க்கார் ஏற்கப்போவதில்லையென்று கடைசியாகவந்த செய்திகள் கூறுகின்றன. பர்மா, தன் உள் நாட்டுப் பிரச்னையில் அயல் நாடுகளின் தலையிட்டை விரும்பாமலிருப்பது இயற்கைதான். ஆனால் பர்மியர் தங்கள் விடுதலையைக் காப்பாற்றிக் கொள்வதில் காட்டும ஆர்வத்தில் நூற்றில் ஒரு பங்காவது தங்களிடமுள்ள பிளவுகளைச் சரிப்படுத்துவதில் காட்டுவார்களானால் பர்மா நிலை மாறவழி பிறக்கும். ●



— 'சங்கர்ஸ் வீக்லி'

வம்பு மடம்

— ஆண்டி —

சேலம் பிராமணர்கள் மகாநாடு தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் காமராஜருக்குத் தன் ஆசிர்வாதத்தை வழங்கியிருக்கிறது. தலைவர் காமராஜர், முத்துரங்க முதலியார் ஸ்தானத்தில் சீனுவாசையர் என்பவரைத் தேர்ந்தெடுத்துச் சட்ட சபை உறுப்பினராக்க முயற்சிக்கிறார்; "நூற்றுக்கு மூன்றுபேர்கூட இல்லாத பிராமணர்களைக்கண்டு நாம் பயப்பட வேண்டியதில்லை" என்று தாம்பரத்தில் பேசும்போது குறிப்பிட்டிருக்கிறார். இவற்றையெல்லாம் பார்க்கும்போது பிராமணோத்தமர்கள் தோழர் காமராஜரின் தலையில் 'அட்சதை' தூவுவதில் ஆச்சரியமில்லை என்றுதான் படுகிறது.

டில்லி சர்க்கார் சமஸ்கிருதத்தைப் பல்கலைக் கழகங்களில் கட்டாய பாடமாக ஏற்படுத்த ஆலோசிப்பதாக வந்துள்ள செய்தி நமக்கு ஆச்சரியத்திற்கு மேல் ஆச்சரியத்தை உண்டாக்குகிறது பிரதமர் நேரு தம் கட்டுரையொன்றில் இச் சமஸ்கிருதத்திற்கு நாம் என்ன செய்தாலும் உயிரூட்ட முடியாதென்று குறிப்பிட்டிருப்பதைக் கல்வியமைச்சர் ஆஸாத் காணத் தவறிவிட்டாரா என்றும் எண்ணவேண்டியிருக்கிறது. உலக விந்தைகளில் இதுவும் ஒன்று என்றுதான் நாம் திருப்தியடைய வேண்டும் போலும்! வாழும் மனிதர்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபடாமல் நாம் கண்ணுற்காணாத தேவர்களின் திருப்திக்கு வழிபாடு நடத்தும் போக்குத்தான் சமஸ்கிருதத்திற்கு உயிர் கொடுக்கும் முயற்சியிலும் இருக்கிறது. நாட்டுமக்கள் நாவில் பயிலும் மொழிகளின் ஏற்றம் காண்பதில் ஏனோ ஆஸாத்தின் கவனம் செல்லவில்லை!

அமைச்சர் மாதவ மேனனுக்குக் கருப்புச்சட்டைக்காரர்களை அடியோடு பிடிப்பதில்லை. அவர் போகிற இடங்களிலெல்லாம் கருப்புச் சட்டையையும் திராவிடர் கழகத்தையும் 'அர்ச்சனை' பண்ணத் தவறுவதில்லை. அப்படிப்பட்ட 'மகானுபாவரை' விழுப்புரம் நகரசபையார் ஒருசிக்கலில் அகப்பட்டுக்கொள்ளவைத்து விட்டார்கள். ஒரு கருப்புச்சட்டைக்காரர் உருவப்படத்தையே அவர் திறக்கும்படிசெய்துவிட்டார்கள்- இந்தப் 'பாவ'காரியத்தைச் செய்ததற்காக விழுப்புரம் நகரகாங்கிரஸ் கமிட்டி மந்திரி மாதவமேனனை வரவேற்பதில்லையென்று முடிவுசெய்துவிட்டதாம். எப்படியிருக்கிறது கூத்து? தான் செய்த பாவத்திற்குப் பிராயச்சித்தமாகக் கருப்புச்சட்டைக்காரர்களை அந்தக் கூட்டத்திலும், தாக்கிப் பேசிவைத்தார் அவர். இப் பேச்சைக் கேட்ட பிறகேனும் விழுப்புரம் காங்கிரஸ்காரர்களின் உள்ளம் குளிர்ந்திருக்குமென்று நம்புகிறோம்.

சென்னை சர்க்கார் வரவு செலவுத்திட்டம் சட்ட சபையில் காரசாரமான பேச்சுகளுக்குக் காரணமாயிருந்தது. அப்போது ரசிக்கத்தக்க தகவல்களையும் சிலர் வெளியிட்டிருக்கிறார்கள். "கோயம்புத்தூர் ஜில்லா மதுவிலக்கு அதிகாரியே தான் குடிப்பதற்கு 'பர்மிட்' வாங்கி வைத்திருக்கிறாராம்; இந்த விஷயத்தைச் சர்க்கார் கவனித்துக்குடிப்பழக்கம் இல்லாதவர்களையே மதுவிலக்கு அதிகாரிகளாகப் போடவேண்டியதவசியம்" என்று தோழர் எம். ஏ. ஈஸ்வரன் குறிப்பிட்டிருக்கிறார். பாலுக்குப் பூனையைக் காவல் வைத்த கதைதான்! சென்னை சட்ட சபையில் பிரதமர் தரிசனம் எப்போதுமே கிடைப்பதில்லையாம் இந்தக் குறையை அடிக்கடி வெளிப்படுத்துகிறார்கள் கனம் அங்கத்தினர்கள். ஒரு பெண் உறுப்பினர், வரவு

செலவுத் திட்ட விவாதத்தில் பொதுமக்கள் காட்டும் அக்கறையளவுகூடப் பிரதமர் காட்டாதிருப்பது வருந்தத்தக்கது என்று குறிப்பிட்டதோடு, அங்கத்தினர்கள் சாற்றும் குற்றச் சாட்டுகளைப் பிரதமர் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமென்று குறிப்பிட்டு "ஒலிபெருக்கி ஏற்பாடு அவர் அறையிலேயே செய்துவிட்டால் என்ன?" என்றும் சபா நாயகருக்கு யோசனை கூறியிருக்கிறார். இந்த ஒலி பெருக்கி ஏற்பாடு வளர்ந்து கொண்டேபோனால் சட்டசபையே தேவைப்படாது. பேசும் அங்கத்தினர்களும் தங்கள் வீட்டிலிருந்தேபேசவும், மந்திரிகளும் தங்கள் தங்கள் வீட்டிலிருந்தே கேட்டுப் பதிலளிக்கவும் தொடங்கிவிடலாம். சபா நாயகருக்கும் சிரமம் குறையும். ஒழுங்கை நிலைநாட்டும் அவசியம் அவருக்கு இல்லாமற் போய் விடுமல்லவா?

நமக்கு வாய்த்துள்ள முதலமைச்சர் அதிசயமானவர்; சட்டசபைக்குப் பெரும்பாலும் வருவதில்லை; தப்பித்தவறி வந்தாலும் தன் பிரசங்கத்தைப் படிக்கத்தான் வருகிறார்; அதுவும் ஒருநாள் தமிழில் படிக்கிறார்; மறுநாள் ஆங்கிலத்தில் படிக்கிறார். இந்த வேடிக்கை ஒரு அங்கத்தினருக்குப் பிடிக்கவில்லை; சபாநாயகருக்குப் பிடித்திருந்த காரணத்தால் அந்த அங்கத்தினர் எழுப்பிய ஒழுங்குப் பிரச்சனை தவிடுபொடியாயிற்று.

வரவு செலவுத் திட்டத்தை அங்கம் அங்கமாக எடுத்து அலசித் தள்ளினார்கள் சென்னை சட்டசபை அங்கத்தினர்கள்; இத்திட்டத்தில் காணும் குறைகளைப் பற்றி சுமார் 60 பேர், 4½ நாள் பேசியிருக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். தாக்கிப் பேசியவர்களெல்லாம் காங்கிரஸ் காரர்கள்; இதனைப் பத்திரிகைகளில் படித்துப் பார்த்த நாம் மிளகாய் வரி, மஞ்சள் வரி யெல்லாம் எடுபட்டு விடும் என்று எண்ணியிருந்தோம்; ஆனால் ஏமாந்தோம். இந்தப் பேச்சுகளால் எள்ளத்தனை பயனும் இல்லை. அவை பத்திரிகைகளில் வெளிவந்தன; அவ்வளவுதான். இன்னொரு பயனும் இருந்தது. அதைத்தான் நிதிமந்திரி கோபால் ரெட்டியார் தம் பதிலுரையில் குறிப்பிட்டிருக்கிறார். "காங்கிரஸ் எம். எல். ஏ.க்களெல்லாம் வெறும் கைகாட்டி மரங்கள்; கட்சிக்கொறடாவுக்குக் கட்டுப்பட்டவர்கள் என்றுதானே எண்ணிக்கொண்டிருந்தீர்கள்! அதனைப் பொய்யாக்கி விட்டார்கள் நம் அங்கத்தினர்கள்; எந்தச் சந்தர்ப்பத்திலும் மக்களின் குறைகளை எடுத்துரைக்க அவர்கள் தயங்குவதில்லை" என்பதாகக் கூறிக் காங்கிரஸ் ஸ்தாபனத்தில் தனிப்பட்டோரின் பேச்சுரிமைக்கு இடமிருக்கிறது என்பதை விளம்பரப்படுத்திக்கொள்ளவே அவர்கள்பேச்சு பயன்பட்டது; பொது மக்களின் குறைகளைப்பேசித்தீர்த்தால் போதும்போலும்!

கனம் கோபால் ரெட்டியார் ஏழைகளின் மீது வரிபோடும் அதிகாரம் அதிகாரம் தனக்கு இருக்கிறதென்றும், பணக்காரர்களின் மீது வரி போடும் அதிகாரமெல்லாம் மத்தியசர்க்கார் வைத்துக் கொண்டுள்ளார்களென்றும் குறிப்பிட்டுள்ளார். மத்திய சர்க்காரோ, மாகாண சர்க்காரிடம் சிக்கிச் சீரழியும்படி ஏழைகளை விட்டுவிடுவோம் என்று கருதாமல் தாங்களும் அவர்கள் மீது 'கருணைமழை' பொழியும் போதுதான் "வரியைத் தாங்கக் கூடிய பலம் ஏழையிடம்தான் இருக்கிறது போலும்!" என்று நாம் கண்ணைமூடிக்கொண்டு நம்பவேண்டியிருக்கிறது.

டில்லி சட்டசபையில் பண்டிதர் நேருவை அங்கத்தினர் ஒருவர் உறுதிமொழி யொன்று கேட்டாராம்; "அடுத்த தேர்தல் நடக்கும் வரை இனிப் புதிதாக மந்திரிகளை நியமிக்க மாட்டீர்களல்லவா?" என்று அவர் கேட்டபோது, பண்டிதர் "அத்தகைய உறுதி மொழியை மற்ற அங்கத்தினர்கள் விரும்பமாட்டார்கள்" என்று குறிப்பிட்டாராம். புதிய புதிய வரிகள் வருவதைப்போன்று புதிய புதிய மந்திரிகளும் வந்துகொண்டிருப்பதைப்பார்த்து அந்த அங்கத்தினர் திணறிப் போனதில் ஆச்சரியமில்லை.

தொடர் கதை



ஆசிரியர்: நக்கீரன்

இருபத்திரண்டாம் அத்தியாயம்
தியாக சிகரம்

சிறையில் நான் எதிர்பார்த்தபடி பாஸ்கரனைச் சந்திக்க முடியவில்லை. அவனுக்குப் பதிலாகப் பாரிஸ்டர் பரந்தாமனைச் சந்தித்தேன். அவர் என்னைக் கண்டதும், "தினபந்துவின் 'மூடுவிழா'வுக்குப் பிறகு உங்களைப் பார்க்கவே முடியவில்லையே!" என்றார்.

"என்னால் தங்களுக்கு எந்த விதமான சிரமமும் ஏற்படக்கூடாது என்பதற்காகத்தான் பார்க்கவில்லை!" என்றேன் நான்.

"சிரமம் என்ன, சிரமம்! நீங்கள் ஒருவிதத்தில் எனக்குச் சிரமம் கொடுத்தால், நான் இன்னொரு விதத்தில் உங்களுக்குச் சிரமம் கொடுத்துவிட்டுப் போகிறேன். ஆனால் பரஸ்பரம் பரிமாறிக் கொள்ளும் சிரமம் உபயோகமுள்ளதாகயிருக்கவேண்டும்; அவ்வளவுதான் விஷயம்!"

"அதாவது முடிந்தவரை ஒருவரையொருவர் உபயோகித்துக்கொண்டு காரியவாதிகளாக வாழவேண்டும் என்றுதானே நீங்கள் சொல்லுகிறீர்கள்?"

"பேஷ்! இவ்வளவு சீக்கிரத்தில் புரிந்து கொண்டுவிட்டீர்களே!"

"இத்தனை நாட்களாகத் தங்களுடன் பழகும் நான், இதைக் கூட புரிந்து கொள்ள முடியாதா, என்ன!"

"ரொம்ப சந்தோஷம்; என்னுடைய தத்துவத்தைப் புரிந்து கொண்டிருந்துமா நீங்கள் வந்து என்னைப் பார்க்கவில்லை?"

"ஆமாம்; தங்களுடைய தத்துவத்தை நான் புரிந்து கொண்டிருந்தாலும் அந்தத் தத்துவத்தைப் பின்பற்ற என் மனம் இடம் கொடுக்கவில்லை"

"மனம் கிடக்கட்டும், மனம்! என்னுடைய தத்துவம் தான் உலக தத்துவம் என்று நான் உங்களுக்கு எத்தனையோ முறை எடுத்துச் சொல்லியிருக்கிறேன், அதையே தான் இன்றும் வற்புறுத்திச் சொல்கிறேன். இந்த விஷயத்தில் உண்மையை ஒப்புக் கொள்கிறவர்கள் ஒரு சிலர்தான். அவர்களைப் பற்றி உலகத்துக்குத் தெரியாது, அத்தகைய உண்மையானவர்களில் நானும் ஒருவன் என்பதை நீங்கள் உணர்ந்தால் அதுவே எனக்குப் போதும்."

"நான் மட்டும் உணர்ந்தால் போதுமா? உலக மக்கள் அனைவரும் உணர வேண்டாமா? அவர்களிடமே நீங்கள் அந்த உண்மையை ஒப்புக் கொள்கிறது தானே?" என்று நான் சிரித்துக் கொண்டே கேட்டேன்.

"என்னைப் பொறுத்தவரை நான் அதற்கு என்றும் தயாராகவே இருக்கிறேன். ஆனால் உண்மையைச் சொன்னால் இந்தப் பாழும் மக்கள் ஒரு நாளும் என்னை நம்பமாட்டார்கள். பரம்பரை பரம்பரையாகப் பொய்யையே நம்பி அவர்களுக்குப் பழக்கமாகப் போய்விட்டது. அவர்களுடைய நம்பிக்கையை, உண்மையைக் கொண்டு இந்தக் காலத்தில் குலைத்து விடமுடியும் என்றும் எனக்குத் தோன்றவில்லை"

"அதற்காக நாமும் பொய்யே பேசவேண்டுமா?'

"அரசியல் உலகத்தில் பொய் பேசாமல் பெரும் வெற்றியடைந்து விட முடியாது. சிறைவாழ்க்கையின் கஷ்டநஷ்டங்களைப் பற்றி வெளியே எத்தனையோ தேச பக்தர்கள் கண்ணீரும் கம்பலையுமாகக் கூறி விடுவதை நான் கேட்டிருக்கிறேன் இங்கே வந்து பார்த்தால் இந்தச்சிறை வாழ்க்கை அப்படியொன்றும் மோசமானதாகத் தெரியவில்லை. முதன் முதலாகச் சிறைக்கு வந்திருக்கும் எனக்கே இப்படித் தோன்றுகிறதென்றால் உங்களைப்போல் பலமுறை வந்தவர்களுக்கு இதில் ஒன்றும் கஷ்டமே தோன்றாது என்று நினைக்கிறேன். ஏதோ ஒரு காலத்தில் சிறையில் கஷ்டங்கள் இருந்திருக்கலாம். இப்பொழுது அப்படியொன்றையும் காணோம். ஏழைபங்காளர்கள் என்று சொல்லிக் கொண்டு வருபவர்கள் இந்த அற்பசொற்பமான கஷ்டத்தைக்கூட அனுபவிக்கவில்லை யென்றால் அர்த்தமேயில்லை. ஆனாலும் 'சிறையில் நாங்கள் அவ்வளவு கஷ்டப்

படவில்லை!' என்று நாம் வெளியே சொல்லிக் கொள்ள முடியுமா? சொன்னால் பொது மக்களுடைய அனுதாபத்துக் குத் தான் நாம் ஆளாக முடியுமா?''

''சிறை வாழ்க்கையில் நமக்கு ஒன்றும் கஷ்டம் தோன்றாம லிருக்கலாம். அதிலும் பொருள் வசதியுள்ள தங்களைப் போன்ற வர்களுக்கு ஒன்றுமே தோன்றாது தான்!— அதாவது, நம்மை நம்பி இருப்பவர்கள் நாம் சிறையில் இருந்தாலும் எந்த விதமான குறையுமின்றி வாழ்க்கையை நடத்தி வருவார் கள் என்ற தைரியம் தங்க ளுக்கு இருக்கும். தங்களைப் போலவே எல்லோரும் இருப் பது சாத்தியமா?''

''ரொம்ப சரி; என்னுடைய நிலையில் இல்லாதவர்கள் தங்க ளுடைய மனைவி மக்களைப் பற் றிக் கவலைப் படுவார்கள் என்று சொல்கிறீர்கள்; ஒப்புக் கொள்கிறேன், ஆனால், அத்தகையவர்கள் சிறையை விட்டு வெளியே வந்ததும் மனித இயற்கையை யொட் டித் தங்கள் தங்களுடைய மனைவி மக்களை நினைந்து வருந் தியதாகவா சொல்லுகிறார்கள்? இல்லையே! தேசத்தைப் பற்றி யும் தேச மக்களைப் பற்றியும் எண்ணிக் கண்ணீர் வடித்த தாகவல்லவா கதறுகிறார்கள்!''

''அவ்வாறு கதறுபவர்கள் கதறிவிட்டுப் போகட்டும்; என் னைப் பொறுத்தவரை நான் கத றாமலிருக்கத் தயார்!''

''கதறாமலிருந்தால் உங் களை யார் லட்சியம் செய்யப் போகிறார்கள்?''

''என்னை யாரும் லட்சியம் செய்ய வேண்டாம்.''

''அப்படியானால் அரசியல் உலகத்துக்கு நீங்கள் லாயக் கில்லை என்று அர்த்தம். அந்த மட்டும் குற்றாலலிங்கம் பரவா யில்லை. அவரை எனக்கு மிக வும் பிடித்திருக்கிறது......''

''நீங்கள் அவரைப் பார்த்தீர் களா, என்ன?''

''ஆமாம், பார்த்தேன்!''

''எங்கே, சென்னைக்கு வந்தி ருந்தாரா?''

''இல்லை, நான்தான் தஞ் சைக்குச் சென்றிருந்தேன்.''

''ஏன்?''

''என்னுடைய மாமனார் வீடு தஞ்சையில்தான் இருக்கிறது. நான சிறையில் இருக்கும் வரை வீட்டுக்கு ஆண் துணை யாரா வது வேண்டுமல்லவா? அதற் காக அவரை அழைத்துவரப் போயிருந்தேன்.''

''அதற்காக நீங்கள் எதற் குப் போகவேண்டும்? கடிதம் எழுதினால் வரமாட்டாரா?''

''வராமலென்ன? எனக்கு அதைத்தவிர வேறு வேலை அங்கே இருந்தது, அதாவது வேதாரண்யத்தை நோக்கிச் செல்லும தொண்டர்களுடன் நானும் கலந்துகொள்ள வேண் டியிருந்தது......''

''என்ன! நீங்கள் சென்னைக் கடற்கரையில் கைதியாக வில் லையா?''

"உங்களுக்கு யார் சொன்னார்கள்? பாஸ்கரன் சொன்னானா?"

"ஆமாம்."

"அவனும் ஒரு பிழைக்கத் தெரியாதபிள்ளை! படிப்படியாக அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்பதில்தான் எனக்கும் அவனுக்கும் அபிப்பிராய ஒற்றுமை இருந்ததே தவிர மற்றவற்றில் இல்லை. சட்டசபைத் தேர்தலில் மேலிடத்தார் தன்னை வருந்தியழைத்து நிற்க வைப்பார்கள் என்று அவன் நினைத்துக் கொண்டிருக்கிறான். இதுகூடக் காலணாவுக்கு வழியின்றி 'ஜே!' போடுவதா, மறியல் செய்வதா மண்டையை உடைத்துக் கொள்வதா? கையைப் பிடித்து இழுப்பதற்கு? பதவிக்குப் பதவி, பணத்துக்குப் பணம், பெருமைக்குப் பெருமை எல்லாம் கிடைக்கும் இந்த விஷயத்திலோ அங்கே ஏகப் போட்டி. காங்கிரஸில் செல்வாக்குள்ள பல பெரிய பெரிய புள்ளிகளையே இந்த விஷயத்தில் காலைவாரி விட்டு விடுகிறார்கள். அப்படியிருக்கும்போது நம்ம பையன் என்னடா என்றால் கனவு காண்கிறான், கனவு! —ஒருநாள் பிரசித்தி பெற்ற காங்கிரஸ் பிரமுகர் ஒருவரிடமிருந்து எனக்கு இருநூறு ரூபாய் பணம் வந்திருந்தது— பாஸ்கரன் அந்தப் பணத்தைப் பார்த்ததும், 'இது எதற்கு?' என்று கேட்டான். 'அந்தப் பிரமுகர் பேசுவதற்காக ஏதாவது ஒரு கூட்டம் கூட்டுவதற்கு!' என்று நான் சாவதானமாகச் சொன்னேன். 'உண்மையாகவா?' என்று அவன் உங்களைப்போலவே திடுக்கிட்டுக் கேட்டான். 'ஆமாம், ரோஜாப் பூ மாலைமட்டும ஆறு வாங்கி வைத்திருந்து அடுத்தடுத்துப் போடச் சொல்லி எனக்கு அவர் எழுதியிருக்கிறார்!' என்றேன். அவன் அசந்து போய்விட்டான். 'ஏன் தம்பி, இதெல்லாம் பொதுமக்கள் தாங்களாகவே செய்வார்கள் என்று நீ நினைத்துக் கொண்டிருந்தாயா?' என்றேன். அவன் அதைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் என்னை வெறுப்புடன் நோக்கி, 'நீங்கள் கூடவா இந்த மோசமான காரியத்துக்கு உடந்தையா யிருக்கிறீர்கள்?' என்று கேட்டான். 'ஆமாம்' என்று நான் சிரித்துக் கொண்டே பதில் அளித்தேன். அன்று என்னை விட்டுப் போனவன் தான்; திரும்பி வரவே யில்லை."

"சரி; அப்புறம?"

"முதலில் நான் அவனிடம் சென்னைக் கடற்கரைக்குப் போகப் போவதாகத்தான் சொல்லியிருந்தேன். அப்புறம் நடந்த ரகளையைப் பார்த்ததும் மெள்ள நழுவி வேதாரண்யத்துக்குச் சென்று விட்டேன்!"

"அப்படியானால் நீங்கள் வேதாரண்யத்தில்தான் கைதியானீர்களா?"

"ஆமாம்"

"பேஷ்! பேஷ்!!"

"இன்னொரு விஷயம் உங்களிடம் சொல்ல வேண்டுமே— குற்றாலலிங்கம்கூடக் கைதியானார்!"

"என்ன அவரும் உங்களுடன் கிளம்பி வேதாரண்யத்துக்கு வந்தாரா, என்ன?"

"இல்லை, இல்லை. 'இந்தச் சமயத்தில் ஒருமுறை எப்படியாவது சிறைக்குச் சென்று விட்டு வந்தால் நன்றாயிருக்கும்' என்று என்னிடம் சொன்னார்..........."

"உங்களை எப்படி அவருக்குத் தெரிந்தது?"

"அவர்தானே அப்பா, எங்களுக்கெல்லாம் வழியில் சாப்பாட்டு வசதி செய்து கொடுத்தார்!"

"ஒஹோ! நான்கூடப் பத்திரிகையில் பார்த்தேன்— அப்புறம்.........?"

"அப்புறம் என்ன? அவருக்குச் சிறை செல்ல வேண்டுமென்று ஆசையிருந்ததே தவிர, அதற்காக வேதாரண்ய யாத்திரை செய்வதற்கு அவர் தயாராயில்லை. 'சென்னைக் கடற்கரையில்தான் துப்பாக்கி வேட்டுச் சத்தம் கேட்கிறது; இங்கே ஒன்றும் கேட்காது— சும்மா வாருங்கள்' என்றேன். அவருக்குத் தைரியமில்லை. அதற்குப் பிறகு அவர் வேதாரண்யம் செல்லாமல் கைதியாவதற்கு வழி என்னவென்று யோசித்தேன். சாப்பாட்டு வசதிமட்டும் செய்து கொடுத்தால் தியாகியாகிவிட முடியுமா? சிறைக்குச் சென்று வந்தால் அல்லவா தியாகியாக முடியும்? — எனக்கும் ஒன்றும் தோன்றவில்லை. அவரோ, 'ஏதாவது ஒரு வழி காட்டிவிட்டுப் போங்கள்'

என்று என்னை நச்சரித்தார். அவருடைய அதிர்ஷ்டமோ என்னவோ, எனக்குத்தெரிந்த பையன் ஒருவனைத் தற்செயலாக நான் அங்கே, சந்தித்தேன். அவனும் அரசியல் வாதிதான். ஒரு சதி வழக்கில் சம்பந்தப்பட்டிருந்ததாக அவன் குற்றம் சாட்டப்பட்டிருந்தான். போலீஸார் அவனைத் தேடிக்கொண்டிருந்தார்கள். அவனே ஒரு வருடகாலமாகத் தலைமறைவாக இருந்து வந்தான். அவனுக்குக் குடிக்கத் தண்ணீர் கொடுப்பவர்கள்கூடக் குற்றவாளியாவார்கள் என்று சர்க்கார் அறிவித்திருந்தார்கள். இந்த லட்சணத்தில் அவன் எத்தனை நாட்கள் தலைமறைவாயிருக்க முடியும்? அலுத்துப் போய்த்தான் போலீஸாரிடம் சரணடைந்துவிடப் போவதாக என்னிடம் சொன்னான். கிடைத்த சந்தர்ப்பத்தை நழுவ விடலாமா? அவனைக் கொண்டு போய்க் குற்றாலலிங்கம் வீட்டில் சேர்த்துவிட்டுப் போலீஸுக்குத் தகவல் கொடுத்தேன். அவர்கள் வந்து அவனைப் பிடித்துக்கொண்டு சென்றதோடு, குற்றால லிங்கத்தையும் பிடித்துக் கொண்டு சென்றார்கள். அவருடைய கனவு நிறைவேறியது. என்னுடைய கவலையும் தீர்ந்தது. அன்று மாலை வெளியான பத்திரிகைகளிலெல்லாம் அப்பழுக்கற்ற அந்தத் தியாகியின் பெயர் கொட்டை எழுத்துக்களில் பிரசுரிக்கப்பட்டது!'' என்று பெருமிதத்துடன் சொல்லிவிட்டுப் பாரிஸ்டர் பரந்தாமன் 'ஹோ' வென்று சிரித்தார்.

"அட, பாவிகளா!'' என்றேன் நான்.

"கேளப்பா, புண்ணியவானே! குற்றாலலிங்கத்தை எனக்குப் பிடித்திருந்ததற்கு இது மட்டும் காரணமல்ல; இன்னொரு காரணமும் இருந்தது........'' என்று அவர் மீண்டும் ஆரம்பித்தார்.

"அது என்ன காரணம்?'' என்று நான் ஆவலுடன் கேட்டேன்.

"அந்தக் காரணத்துக்குக் காரணமாயிருந்தவர் என் மாமனார்தான்! அவர் சொன்ன ஒரு கதை என்னையே தூக்கி வாரிப் போட்டது என்றால் பார்த்துக்கொள்ளுங்களேன்''

"அது என்ன கதை?''

"சிவகுமாரன் யாருடைய கற்பையோ அழிக்கப் போய்ச் செத்தொழிந்தான் என்றல்லவா பத்திரிகைகளில் போட்டிருந்தது? ஆனால் குற்றாலலிங்கம் தாம் பேசும் பொதுக் கூட்டங்களிலெல்லாம் என்ன சொல்வாராம், தெரியுமா? தம்முடைய அருமை மகன் தேசத்துக்காகச் செய்த சேவையைப் பற்றி ஆதியோடந்தமாகச் சொல்லிவிட்டு, கடைசியில் ஒரு பேதைப் பெண்ணின் கற்பைக் காக்கப்போய் தன் உயிரையே தியாகம் செய்தான் என்று பிரசங்கத்தை முடிப்பாராம்!''

"ஊரார் அதைக் கேட்டுச் சிரிக்கவில்லையா?''

"ஊரார் சிரித்தார்களோ, என்னவோ! ஆனால் ஒரே ஒருத்தி மட்டும் அந்த அபத்தத்தைக் கேட்டுவிட்டுச் சிரித்தாளாம்!''

"அந்த மட்டும் ஒரு புத்தி சாலிப் பெண்ணுவது அந்த ஊரில் இருந்தாளே!"

"அந்தப் புத்திசாலிப் பெண் வேறுயாருமில்லை; தன்னுடைய கற்பைக் காக்க வந்த சிவகுமாரனை அநியாயமாகக் கொன்று விட்டுச் சிறைக்குச் சென்று வந்திருந்தாளே, அவள் தான்!"

"அப்படிச் சொல்லுங்கள்! உண்மை அவளுக்குத் தவிர வேறு யாருக்கும் தெரியவில்லை யாக்கும்"!

"உண்மை தெரிந்ததால் தானே அவளுக்குப்பைத்தியம் பிடித்தது..........."

"என்ன அவளுக்குப் பைத்தியமா பிடித்து விட்டது?"

"ஆமாம், உண்மை தெரிந்தால் பைத்தியம் பிடிக்காமல் வேறு என்ன பிடிக்கும்? அதனுல்தான் குற்ருலலிங்கத்தின் பிரசங்கத்தை அவள் என்று கேட்டாளோ, அன்றிலிருந்து இன்றுவரை ஓயாமல் சிரித்துக்கொண்டே இருக்கிருளாம்!" என்று கூறி, அந்தச் சோகக் கதையை முடித்தார் அவர்.

"ஐயோ, பாவம்!" என்றேன் நான்.

"பாவமாவது! சிறையிலிருந்து வந்ததும் செய்யாமங்கலத்தில் தம்முடைய அருமைக் குமாரனுக்காக, அல்லும் பகலும் 'தேசம், தேசம்' என்று அடித்துக்கொண்டிருந்தவனுக்காக, அவர் ஞாபகச் சின்னம் வேறு நிறுவப் போகிருராம்!"

"நாசமாய்ப்போச்சு! அதற்கு நிதி திரட்ட வேண்டாமா? யார் பணம் கொடுப்பார்களாம்?"

"அவர் இருக்கிருர்; நான் இருக்கிறேன். எங்களைப் போல் இன்னும் நாலுபேர் சேர்ந்தால் அவருடைய எண்ணம் பூர்த்தியாகிவிடுகிறது! நாங்களும் பொது மக்கள் தாமே?" என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

"இதுவும் ஒரு பிழைப்பா!" என்றேன் நான் வெறுப்புடன்.

"சந்தேகமென்ன? இதுதான் தற்கால உலகத்தோடு ஒட்டிய பிழைப்பு! என்னைப் போல் அவரும் பிழைக்கத் தெரிந்தவர்; பிழைக்கிருர்! அவரே அரசியல் ஞானி; அவரே ராஜ தந்திரி; அவரே தியாக சிகரம்; அவரே தீன பந்து.........!" என்று அவர் விஷமத்தனமான புன்னகையுடன் மேலும் மேலும் அடுக்கிக் கொண்டே போனுர்.

நான் பொறுமை இழந்து, "போதும், நிறுத்துங்கள்!" என்று கத்தினேன்.

(தொடரும்)

நினைப்பும் நடப்பும்


ஸார்! ஒரு பேஷான குட்டி ...... சுடுத்தரம்
1
உம்ம்ம் ....
2
இளம் வயசு... சூட்டிகை அதிகம்... அப்படியே வாரி அணைச்சுக்கொள்ளலாமா வென்று கூடத் தோன்றும்
3
அப்படியா? ... சீக்கிரமாய்ப் போய் கொண்டு வருகிறீரா?
4
சரீங்க, ஸார்!
5
பார்த்தீங்களா, ஸார்! இந்தக் குட்டியை நாம் இப்போது எடுத்துக்கொண்டிருக்கும் பூங்காவன செட்டிங்கில் உலவ விட்டுப் படம் பிடித்தால் எவ்வளவு ஜோராக இருக்கும்!
?!?!?!
6

சிலப்பதிகாரக் காட்சிகள்

வி. சு. திருநாவுக்கரசு

3. மாதவி மன மாற்றம்

மாதவி காதலுடன் வழங்கிய யாழிலே கோவலன் காதற் கவிதைகளைப் பாடினான்; அவை அனைத்தும் சிலப்பதிகாரத்தின் தனிச் சிறப்பைப் புலப்படுத்தி வருகின்றன.

அவ்வரிசையில் தலைவன் பாங்கன் கேட்கும் வினாவுக்கு விடையாகப் பேசுவன முரிவரி என்று குறிக்கப்படும். பெண்ணொருத்தியின் பேரழகிலே நெஞ்சைப் பறிபோக விட்ட தலைவன் அவள் நலங்களைப் பலவாறு சிறக்க அவள் முன்பே பேசுகிறான். தன்னைப் பல நாளாய்ச் சேய்மையில் நின்று பார்த்தும் நாட்கள் செல்ல அணிமையில் வந்து பார்த்தும் அருகே வந்து கண்ணோச்சியும் சென்றவன் இப்போது நேருக்கு நேராக நின்று அவள் பேரழகைப் பாராட்டுகிறான். அவளைக் காண்பதில் தான் ஆர்வங் காட்டுவதுபோல் தனனைக் காண்பதில் அவளும் ஆர்வமுடையவளாய் இருப்பதை அவன் மிக எளிதாய்க் கண்டு கொள்ளுகிறான். ஆனால் தான் பேசுவதுபோல அவளொன்றும் பேசுவதில்லையே என்பதில் ஏக்கமடைந்து, உள்ளமுடைந்து, உடல்சோர்ந்து போகிறான். அவனைக் கண்ட தோழனுக்கு அவன் நிலையொன்றும் புரிவதாயில்லை.



அவன் சில நாளாய்த் தனனை விட்டுத் தனியே செல்வதிலும், செல்லுமுன் இருந்த முகம், சென்று வந்த பின் மாறிப்போவதையும் குறிப்பாய்க் கவ

னித்து வந்திருக்கிருன். 'இதற்கெல்லாம் காரணம் என்ன?' என்று எண்ணி ஒருநாள் தலைவனிடமே இதுபற்றி வினவுகிருன். நானடைந்த துன்பம் என்ன! இத்துன்பத்திற்குக் காரணமானவர் யார்? என்றெல்லாம் வினவுகிருய். அதைநான் இனியும் மறைப்பது இயலாது! கேள் வெண்மையான சங்குகளைப் பெற்றெடுத்த கடற்பெண், அலையாகிய தன் கையால் அவைகளை ஏந்தி வந்து குவிக்கின்ற கரையிலே அவள் உலாவி வருவாள். வெண்மையமான மணல் வெளியின் பரந்த இடமெல்லாம் பாதச்சிலம்பு பாட அவள் நடந்துவருவாள். மணம் நிறைந்த சோலையிலே மயிலென நடந்து மறைவாள். கடற்கரையிலே மணற் பரப்பிலே சோலை தனிலே சுழன்று வரும் அவளை என்மனம் என்னவோ சுற்றி வருகிறது.

திரைவிரி தருதுறையே
    திருமணல் விரியிடமே
விரைவிரி நறுமலரே
    மிடைதரு பொழிலிடமே
மருவிரி புரிகுடிலே
    மதிபுரை திருமுகமே
இருகயல் இணைவிழியே
    யெனையிடர் செய்தவையே

அவள் கூந்தல்-குழல் போல் சுருண்டு இருண்டது. கோதி முடிக்கப்பட்ட அக் கூந்தல் குலைந்து கலைந்ததால் மணம் விரிந்து பரவுகிறது. அத்தனை இயற்கைமணம் நிறைந்த கூந்தல். நண்பகற் பொழுதிலும் வெம்மை தணிக்கும் மதி போன்ற குளிர்முகம். நீம்புனல் பரப்பிலே ஓடிப்பிறழும் கயல் போலும் கண்கள். இவைகள் செய்த துன்பமே இதற்குக் காரணம் என்று கூறுகிருன தலைவன்.

நாடகப் பண்பொன்றின் நயப்பாட்டினை ஆசிரியர் இளங்கோ இங்கு நுட்பமாய், நுணுக்கமாய் அமைத்திருக்கிருர். திருமுகத்திலே இரு கயல்விழிகள் என அவன் அவள் நலம் பாராட்டிய பொழுது நாணம் தாங்காது அப்படியே திரும்பிக் கொள்ளுகிருள். ஆம், புறமுதுகு தான் காட்டுகிருள். அதை நல்ல வாய்ப்பாய் வைத்துக்கொண்டு அவள் கூந்தலை வருணிப்பவனாய் 'மருவிரி புரிகுழலே' என்கிருன். முகம் காட்ட இயலாமலும் முதுகு காட்ட முடியாமலும் அவளைத்திணரவைத்து விடுவதிலே அவன் திறமைகலை மெருகு பிடித்து வருகிறதல்லவா?

இத்தகைய திறம்படைத்தவனின் காதலி பவளத்தாலான உலக்கை பிடித்து முத்துக்களைக் குற்றுகிருள். கருங்குவளை மலரைக் கையிலே ஏந்தி, புலால் கவரவரும் புட்களை ஓட்டுகிருள். அவள் கண்கள் குவளையுமல்ல, (கண்ணுக்குக் குவளை மலரை உவமித்தல் மரபு) கூர்மையாய்ப் பாயும் வேலுமல்ல.

பவள உலக்கை கையாற் பற்றித்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
தவள முத்தங் குறுவாள் செங்கண்
குவளை யல்ல கொடிய கொடிய.

குவளையிலே உள்ள குளுமை இல்லை; கொடுமை உண்டு. கொடிய கொடிய என்று அழுத்தமாய் வலியுறுத்துகிருன்.

கள்வாய் நீலங் கையி(ல்) ஏந்திப்
புள்வா யுணங்கல் கடிவாள் செங்கண்
புள்வா(ய்) உணங்கல் கடிவாள்செங்கண்
வெள்வே(ல்) அல்ல வெய்ய வெய்ய.

அவள் கண்கள் வேலு மல்ல. வெப்பத்தால் ஒப்பிட முடியாத கொடுமை வாய்ந் தவை. கூற்றுவன் செய்யும் கொடுந்தொழிலை அவள் நெடுங்கண் செய்வதால் அவை 'கொன்னே வெய்ய கூற் றம் கூற்றம' என்று முடிவுக்கு வருகிறான். காதல் வயப்பட்ட தலைவன் ஒருவன் தன் காத லியைப் பாராட்டிக் கூறுவது போலுள்ள இப்பாடல்களைக் கோவலன் மாசற்ற தூய உள் ளத்தோடு உவந்து பாடினான். விதிபுகுந்து இருவர் பிரிய வழி காட்டியது; கண்ணகியின் கண் ணீரைத் துடைத்தது. மறந்து போன கண்ணகியை நினைக்க வைத்தது. இதன் விளைவுதான் மாதவியின் மன மாற்றம். மற்றொரு பெண் ணின் மேல் கோவலன் மையல் கொண்டு பாடியதாய் மாதவி எண்ணினாள். தானும் மற் றொரு தலைவனை (பொய்யாக) விரும்புவதாய்க் காட்ட நினைத்து யாழை வாங்கி மீட் டினாள். கோவலன் பாடியது போல காவிரியைப் பாடுகிறாள்.

மருங்குவண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்கயற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி

காவிரிப்புனலிலே பலநிறப் பூக்கள் படிந்து செல்லுகின் றன. அது காவிரிப் பெண் ணுக்குப் பூ ஆடையாகப் பொலிவு கொடுக்கிறது. மீனு கிய கண்களால் பார்த்து, பெண்மைக்குரிய நாணத்தால் ஒதுங்கி நடந்து செல்லுகிறாள். இவள் வருகையை மயில் ஆடி வரவேற்கிறது; குயில் பாடி அழைக்கிறது.

பூவார் சோலை மயிலாலப்
புரிந்து குயில்கள் இசைபாடக்
காமர் மாலை அருகசைய
நடந்தாய் வாழி காவேரி

உன் கணவனாகிய சோழன் மாசு மறுவற்ற மனத்தோடு செங்கோல் புரிவதால் மாலை யசைய மகிழ்ந்து செல்லுகிறாய்.

காமர் மாலை அருகசைய
நடந்த வெல்லாம் நின்கணவன்
நாமவேலின் திறங்கண்டே
யறிந்தேன் வாழி காவேரி

காவிரியைப் பாராட்டிய பின் னர் கோவலனைப் போலப் பூம் புகார் நகரத்தையும் புகழ்ந்து பாடுகிறாள்.

தலைவனைப் பிரிந்து அவன் வருகை நினைந்து வருந்தும் தலைவி நிலையில் தன் கருத்தை மெல்ல வெளிப்படுத்துகிறாள் மாதவி. கடற்கரையிலே ஆணும் பெண்ணுமாய் அருகே விளை யாடும் காதல் நண்டுகள் இரண் டையும் பார்த்து, என்னையும் பார்த்தார் என்காதலர். அவர் இயல் பொன்றையும் என்னால் அறியமுடியவில்லையே என்று நினைத்துவாடுகிறாள். தோழியை நோக்கி வினவுகிறாள்.

புணர் துணையோடு ஆடும்
பொறியலவ னோக்கி
இணர் ததையும் பூங்கானல்
என்னையும் நோக்கி
உணர்வு ஒழியப்போன
ஒலிதிரை நீர்ச்சேர்ப்பன்
வணர் சுரி மையம்பாலோய்
வண்ண முணரேனால்

அந்த ஊமை நாடகத்திலே நண்டையும் பார்த்து, நங்கை யையும் பார்த்து அதிலே தன் எண்ணத்தையும் வார்த்து விடுகிறான் தலைவன். அவன் திறமே திறம்!

எழிலின் இருப்பே! இவையெல்லாம் சிந்தித்(து)
எழுதினேன் நின்னுளத்தை என்னில்—அழுந்தவிடு!

சற்றும் மறுக்காமல் சாற்றுவாய் உன்விருப்பம்
முற்றும் எனக்''கென்று முடித்தந்தப்—பொற்பாவைக்

கென்னுள் எழுந்துவிட்ட இன்ப வேட்கையெலாம்
பன்னு முடங்கலினைப் பாவைதிரு—முன்வீழப்

போட்டுவந்தேன் என்னுளத்தைக் காட்டிவந்தேன். 'இன்னிசையை
மீட்டியென்றன் வாழ்வில் மினுமினுப்புக்—காட்டுவாள்'

என்று துடித்துக்கொண் டெப்பொழுது மீண்டுமோர்
பொன்மாலை வந்திங்குப் பூரிப்பை—என்வாழ்வில்

சேர்க்குமெனக் காத்திருந்து சென்றேன் மறுநாளப்
பூக்குழலி சோலைவிட்டுப் போகுங்கால்—தேக்கிவைத்த

அன்பை விழிகாட்ட ஆசைக் கணைபோடத்
தன்கை யிருந்ததோர் தாள்போட்டுச்—சென்றகன்றாள்.

ஆவலோடோடினேன் அப்பொழுதே தாளெடுத்தேன்
'பூவையெனக் கேற்றதிருப் பூமானே—நாவலரே

என்றுவரைந்தாளோ? என்னை யணைக்குந் தோட்
குன்றுடையாய் என்று குறித்தாளோ?—மன்றலிலே

சீர்திருத்தம் வேண்டுமெனும் செய்தி வரைந்தாளோ?
ஆர்வத்தைத் தேன்தமிழில் அன்போடு—சேர்த்து

நிறைத்தாளோ?' என்று நினைத்தோடித் தாளின்
முதற்சொல் படித்தவுடன் தாளைக் கசக்கினேன்.

ஆருயிர்க் காதலரென் றென்னையழையாமல்
ஒருரையில் "அண்ணா"வென் றோதிவிட்ட—நேரிழையின்

போக்கைப் படித்தோ புரிந்துகொள்ள வேண்டுமிது
யார்க்கும் தெரியு மடா!



துரோகி

— தில்லை வில்லாளன் —



ஐந்தாம் அத்தியாயம்

வாரும்! வாரும்!

அமீன்சந்த் உள் நுழைந்ததைக் கண்ட ஸூராஜூவின் உள்ளத்தில் பயம் படமெடுத்தாடிற்று. முடீன்கானின் இதயத்திலும் ஒரு இடி விழுந்தது போன்ற அதிர்ச்சி......! அலிவர்திகான் அவனை அன்போடு வரவேற்றான்.

"என்னை அழைத்ததின் காரணம் யாதோ?"

"வெள்ளையரின் வியாபார நிலவரம் எப்படி?"

"பணப்புழக்கம் அதிகம்"

"அதிகமென்றால்......?"

"அளவிற்கு மீறியது என்றுதான் சொல்லவேண்டும்"

அலிவர்திகான் சிரித்தான். மற்ற இருவரும் அப்பொழுதுதான் பெரும்பாரங் கழிந்தது போன்ற உணர்ச்சி கொண்டனர்.

"இப்பொழுது இங்கு டிரேக் வருவான். வந்தால் ஐந்து இலட்சம் கேட்கப்போகிறேன். கேட்டால் அவர்கள் தர இயலுமல்லவா?"

"தாராளமாக!"

"சரி, தங்களைப் பிறகு சந்திக்கிறேன்"

"ஆமாம், யானும் தங்களைச் சந்திக்கவேண்டியிருக்கிறது. அப்படியொன்றும் அவசரமில்லை. நிதானமாகச் சொல்கிறேன்"

அமீன்சந்த் வெளியேறினான்.

"ஸூராஜ், நீ அடுத்தபடி சுபேதாராக வேண்டியவன்.

கண்டபடி திரிதலும், காலித்தனங்கள் புரிவதும் உன்னிடம் வங்கம் எதிர்பார்க்க வில்லை. கண்ணியத்தை, கடமையுணர்வைத்தான் காண ஆசைப்படுகிறது. மூடன், நீ அவனது தோழன். உண்மைத் தோழனாக இரு''

''சரி, தாதா''

''நீங்கள் போகலாம்!''

இருவரும் பெருமூச்செறிந்தனர்.

அமீன்சந்த் சுபேதாரின் மாளிகை வெளிவாயிற்படியை அடைந்தான். அப்பொழுதுதான் டிரேக்கும் மின்சினும் வந்துகொண்டிருந்தனர். சுபேதாரின் அழைப்பின்பேரில்வந்த வெள்ளைய வணிகத் தலைவர்கள் அவர்கள்! அவர்கள் ஏற்கனவே அமீன்சந்த்தைச் சந்திக்க வேண்டும் என்று சோணிசந்த் மூலம் செய்தி தெரிவித்திருந்தனர். ஆனால் வரவில்லை!

''ஐயா, வணக்கம்''

''வணக்கம் கிடக்கட்டும். உங்கள் வாழ்வு பறிபோகப் போகிறது. சுபேதார் ஐந்து இலட்சம் கேட்கப்போகிறான். ஏமாந்து கொடுத்து விடாதீர்கள்! தந்திரமாகப் பேசித் தட்டிக் கழித்து விடுங்கள்''

அமீன்சந்த் காதோடு காதாக இந்த மந்திரத்தை ஓதி விட்டான்! பிறகு அவர்கள் உள்ளே சென்றனர்.

''வெள்ளைய வணிகரே! வாரும், வாரும். இப்படி அமரும்.''

''கனம் சுபேதார் அவர்களுக்கு வணக்கம்......''

''நாம் உங்களை இப்பொழுது அழைத்தது வணக்கமோ, வாழ்த்தோ பெற அல்ல. அதற்கு ஏராளமான மக்கள் உண்டு நம் நாட்டில்!''

''எங்களை வரும்படிப் பணித்ததின் காரணம்......?''

''நோக்கம் ஆக்கத்தின் மீது தான்''

''அப்படி யென்றால்?''

''நமது பொற்களஞ்சியத்தில் பஞ்சம் தலைவிரித்தாடுகிறது''

''அதற்கு எங்களவர் செய்ய வேண்டிய தொண்டு யாதோ?''

''வழக்கம்போல்......''

''காணிக்கை தானே? தவறாது செலுத்தக் கடமைப் பட்டுள்ளோம். உங்கள் எல்லையில் எங்கள் வயிறு வளர்கிறது. வாழ்வும், தாழ்வும் வங்கத்தின் புன்சிரிப்பில்தான் இருக்கிறது. ஆனாலும்......''

''ஆனாலும்.....என்று இழுப்பானேன்? தவக்கம் வேண்டாம். உடனே பணம் வந்தாக வேண்டும். ஐந்து இலட்சம் அவசியம் எதிர்பார்க்கிறோம். அதுவும் இன்றே, இப்பொழுதே!''

''ஐயோ, அவ்வளவு தொகை, இவ்வளவு விரைவிலா?''

''வாதாட நேரமில்லை. வங்கத்தின் அரசாங்கம் கேட்கிறது. விருப்பமிருந்தால் வரட்டும் தொகை. இல்லாவிட்டால் சுபேதாரின் கட்டளையைத் தாங்கட்டும்!''

''வயிற்றைக் கழுவக் கடல் கடந்து ஓடிவந்திருக்கும் சிறுவர்களிடம் சினங்கூடாது''

"உபதேசம் போதும், உடன் விடை"

அலிவர்திகான் தொடக்கத்திலிருந்தே சூடாகவே வார்த்தைகளை வீசிக்கொண்டிருந்தான். ஆனால் வந்தவர்களோ பணிவாகவும் கனிவாகவும் விடையளித்து வந்தார்கள். டிரேக்கும், மின்சினும் எப்படியும் தணிவாகப் பேசித் தப்பித்துக் கொள்ள முயற்சி செய்கிறார்கள் என்பது அவர்களது முக பாவங்களிலிருந்து பளிச்சென்று புரிந்தது.

"சென்ற வாரம் மூன்று இலட்சம்......"

"காணிக்கை செலுத்தினீர்கள்"

"சுபேதார் அவர்களுக்கு நினைவு படுத்தினோம்"

"அந்தப் பணியையும், சிரமத்தையும் வெளிநாட்டு வெள்ளையர்களுக்குக் கொடுக்க முகலாயன் துணியமாட்டான், சுபேதார் ஞாபகசக்தி யுள்ளவர்"

"மீண்டும் பணிவாகச் சொல்கிறோம்-சிற்றம் ஆற்றல் குறைவின் அறிகுறி"

"நீங்கள் செவிடர்களல்லவே! உங்கள் விடையைப் பணமாக எதிர்பார்க்கிறேன், பேச்சால் அல்ல!"

அலிவர்திகான் காலத்தில் தான் கல்கத்தாவில் வெள்ளையர் பரம்பரையினர் தங்கள் கடைகளை விரித்தனர். மெதுவாக நுழைந்தனர். சுபேதார் ஆதரவு கிடைத்தது. ஆதரவு பெறப் பணத்தை அள்ளிக் கொட்டினர். ஆம், அலிவர்திகானுக்கும் அந்த முறையில் தான் பணங்கொடுத்தனர். சுபேதார் எவ்வப்பொழுது கஜானாவில் இடுக்கு விழுகிறதோ அவ்வப்பொழுதெல்லாம் இந்த அந்நிய வியாபாரிகளுக்கு அழைப்பு விடுவான். அழைப்பு என்றாலே அவர்களுககுத் தெரியும். கையுடனேயே பையைக் கொண்டு செல்வர் வெள்ளைய வணிகர்கள். அது அவர்களுக்கு வாடிக்கை!

அலிவர்திகன் திடீரென்று கல்கத்தாக் கோட்டைக்குக் கட்டளையை அனுப்பினான். டிரேக்கும், மின்சினும் ஓடோடி வந்தனர். அவர்களுக்கு இது ஆச்சரியமாயிருந்தது. சென்ற வாரந்தான் மூன்று இலட்சத்தைக் கட்டிச் சென்றார்கள். அதற்குள்ளாகவா பணம் கேட்பர்? இருக்காது! பின் ஏன் அழைக்கிறார் சுபேதார் என்று புரியவில்லை. இத்தகைய குழப்பத்துடன் இரு பெரும் வணிகத்தலைவர்களும் வந்தார்கள். அமீன்சந்தின் வார்த்தைகளால் விபரந்தெரிந்து கொண்டனர். பிறகு பேச்சும நடந்தது!

கோபத்துடன் திரும்பி நின்று கொண்டிருந்த சுபேதார் பார்வைக்காகக் காத்து நின்றனர்.

"மன்னிக்க வேண்டும், ஒரு விண்ணப்பம்" என்றான் டிரேக். அவன் குரல் நடுங்கிற்று. அவ்வளவு பயம்! இதைக்கேட்ட அலிவர்திகான் திரும்பினான் அவனது இயல்பான அதிகாரக் குரல் மீண்டும் ஒலித்தது!

"என்ன அது?"

"தொகையைத் தருகிறோம. ஆனால்......" என்றான் வணிகன்.

"சுருங்கச் சொல்லும்" என்றான் சுபேதார்.

"கொஞ்சம் குறையுங்கள் எண்ணிக்கையை...... ஐந்தை மூன்றாக்க வேண்டும்!" இது டிரேக்கின் விண்ணப்பம்.

"தொகையைக் குறைப்பதோடு நாளைக் கூட்டவேண்டும்." இதுவரை பயந்து நடுங்கிக் கொண்டு பேசவுந் துணிவில்லாமல் நின்று கொண்டிருந்த மின்சினின் இடைச் செருகல் இது!

"ஹா.....:ஹா......"

கோபச் சிரிப்பு அந்த மண்டபம் எங்கும் எதிரொலித்தது.

"வெகுஜோர் உங்கள் பஞ்சப்பாட்டு. ஆனால் ஏமாந்து இதனை இரசிக்க அலிவர்திகான் ஆளல்லன். நமது நாட்டு மக்களின் பணத்தைக் கொள்ளையடிக்கிற உங்களுக்கு ஐந்து இலட்சம் ஒரு பெரிய தொகை! அதைச் சேர்க்க ஒரு திங்கள் தவணை! யாரிடம் இந்த எத்தல் விளையாட்டு!"—இத்துடன் முடியவில்லை அவனது கோபப்பேச்சு, மேலும் தொடர்ந்தது!

"எனது கடைசிக் கட்டளை – ஐந்து இலட்சம் நமது கஜானாவில் கட்டப்படவேண்டும். இல்லாவிட்டால் வர்த்தக உரிமை பறிக்கப்படும்"

"ஐயோ கருணை காட்டவேண்டும். உங்களை நம்பி எத்தனை வயிறுகள் அந்தக் கோட்டையில் உலவுகின்றன. உண்மையில் சொல்லுகிறோம். எங்களிடம் பண முடை இப்பொழுது. இன்னொரு முறை.............." என்றார்கள் இருவரும்.

"பன்னிப் பன்னிப் பேசுவதில் பலனில்லை. இன்னல் வரும். இது என் கடைசிக் கட்டளை; எச்சரிக்கை!"

சுபேதாரின் ஆணையை மீற நாட்டில் ஆள் ஏது? இருந்தால் அவன் தலை தப்புமா? வணிகர்கள் வாய்மூடி மௌனிகளாகி விட்டனர். என்றாலும்.................

"மன்னிக்கவேண்டும். பணம் இல்லை கையில். இது பிடிவாதமல்ல! கடைசியாகச் சொல்ல வைத்திருப்பது இவ்வளவுதான்" அத்துடன் ஓய்ந்தனர்.

"சரி நீங்கள் போகலாம்"

சுபேதார் உரையாடலை முடித்து விட்டான்.

இம் மாதிரி நடப்பது அந்தக் காலத்தில் ஆச்சர்யமான செயலல்ல, அடிக்கடி நடைபெறும் செயல்! அலிவர்திகான் அழைப்பான். வருவர். பணந்தருவர் பல சமயங்களில்! இல்லையென்பதும உண்டு. அப்பொழுது வணிக உரிமையைப் பறிப்பான். பிறகு வேண்டுவர். மீண்டுந் தருவான். ஆகவே புதுமை வழியும் செயல் இல்லைதான் அது. என்றாலும் இம் முறை நடந்ததுபோல வேறெம் முறையும நடந்ததில்லை. சுபேதார் இவ்வளவு தூரம் யாரிடமும் வாதாடியதில்லை. வாதாடியும வழிக்கு வரவில்லை! ஆகவே சினம் வழக்கம்போல் சிறு பொறியாகப் போகவில்லை. பெரு நெருப்பாயிற்று.

வெள்ளையர் கோட்டைக் கதவைத் தாண்டினர். அலிவர்திகானின் ஆத்திரமும் அணையைக் கடந்தது.

ஆறும் அத்தியாயம்

பயங்கரத் திட்டம்

அமீன்சந்த் சிரித்தான்!

"உம்.........என்ன பலமான யோசனை?" என்றான் பின்னாலிருந்து வந்த ஆள்.

அமீன்சந்த பின்பக்கம் நோக்கினான். மீண்டும் சிரித்தான்!

"டிரேக் துரையவர்களே, வாருங்கள்" என்றான்.

"மிகவும் நன்றி" என்றான், டிரேக்.

"அது சரி, மூர்ஷிடாபாத் மிருகம் மிகவும் உருமிற்றோ?"

"பன்றி சிங்கமென்று தன்னை நினைத்துக்கொண்டால் உருமாதா? பலமாக உருமிற்று! ஆனால் இந்தச் சலசலப்புக்கு அஞ்சுவனவா வெள்ளை நரிகள்?"

"பார்த்தீர்களா, நான் அப்பொழுதே சொல்லவில்லையா?"

"சொன்னது நடந்தது. தங்கள் உபதேசப்படியே மிக அழகாக நடித்தோம். சுபேதார் துள்ளினான்"

மீண்டும் இருவரும் சேர்ந்து சிரித்தனர்.

அமீன்சந்த் இப்பொழுது சற்றுக் குரலைத் தாழ்த்தி "இனிமேல்தான் நமக்கு ஆபத்து ஆரம்பிக்கிறது, ஞாபகமிருக்கட்டும்" என்றான்.

"அதற்காகத்தானே தங்களை நாடி வந்திருக்கிறேன்" என்றான் டிரேடிக், மிக மெல்லிய குரலில்.

"பழைய நினைவுகள் — கொஞ்சநேரம் சிந்தியுங்கள்" அமீன் சந்த் பேச்சை இப்பொழுது நிறுத்திவிட்டான். சுற்றும் முற்றும் பார்த்தான்.

"என்ன, தங்கள் ஒத்துழைப்பால்தான் கல்கத்தாவில் காலடி எடுத்து வைத்தோம். அதற்கு என்றென்றைக்கும் கடமைப்பட்டிருக்கிறோம்" என்றான டிரேக் மீண்டும்.

"நன்றியுரை, பேச்சில்! நடத்தையில் நாணயமில்லை. நான் உங்களிடம் ஒப்பந்தம் பேசி வியாபாரத்தைத் தொடங்கினேன். ஆனால்.........?"

"தக்க உதவிகள் முடிந்த அளவு செய்தோம்"

"செய்தீர்கள் தொடக்கத்தில்! நடுவில் விட்டீர்கள் நட்டாற்றில்........இல்லையா?"

"மன்னிக்க வேண்டும், ஆத்திரத்திற்கு இது நேரமில்லை. ஆபத்து, ஆம், தலைக்கே வந்துவிட்டது!"

இப்பொழுது அமீன்சந்த் மனத்திற்குள்ளேயே சிரித்துக் கொண்டான்.

"ஆபத்து.........! ஆபத்து எங்கிருந்து பிறக்குமோ அந்த இடத்திற்கே ஆபத்துவர ஏற்பாடு செய்துவிட்டால்......?"

"என்ன?"

"புரியவில்லையா?"



"புரிகிறது — சிறு சந்தேகம்!"

"ஏன்? வார்த்தைகளை வளர்த்துவது வணிகத்தொழிலுக்கு அழகு. இப்பொழுது சுருக்கம் — ஏனெனில் நமது வேலை வெகு நெருக்கத்தில் முடிந்தாக வேண்டும்"

"விளங்கச் சொல்லும், வித்தகரே"

எதிரில் கிடந்த மேஜையின் மீது. ஆப்பிள் பழம் ஒன்று இருந்தது. சட்டென்று அப்பழம் எடுக்கப்பட்டது. அதன் மீது சிறு கத்தி வீச்சு—வெட்டு ஒன்று, துண்டு இரண்டு: அமீன்சந்த் இதைக் காட்டினான். டிரேக் வாயடைத்து விட்டான்.

"அலிவர்திகானைக் கொல்ல வேண்டும்—அது தானே?"

"ஆம், அது என் ஆசை. ஆசைப் பெரு வெள்ளத்தின் ஒரு துளி! அலிவர்திகானை

மட்டும் என்ன, அவன் பரம் பரையையே அழிக்க வேண்டும். இந்தியாவில் மொட்டைக் குல்லாயையே விடக் கூடாது. சக்தியும், சந்தர்ப்பமுமிருந்தால்............?"

அமீன்சந்த சட்டென்று விழிகளை நாலா பக்கங்களிலும் ஓட்டினான். அவன் முகத்தில் பிணக்களை வழிந்தது அப்பொழுது! ஆனால் அப்பொழுது டிரேக்.........? மின்வெட்டுப் போன்ற ஒரு எண்ணம் தோன்றி மறைந்தது—அலிவர்திகானின் கழுத்தில் பாயுங் கத்தி நாளை டிரேக்கின் இதயத்திலும் பாய்ச்சப்படுமே?......... என்று எண்ணினான். அவன் மெதுவாக எச்சிலை விழுங்கினான். எச்சில் விழுங்கிய சத்தங்கூடக் கடக்கென்று கேட்டது. அவ்வளவு நிசப்தம் அங்கு!

"சுபேதார்........... அவரது மாளிகையிலே கொலை! சுலபமல்ல இந்தச் செயல், காரியத்தில் இறங்கி மாட்டிக்கொண்டால்" டிரேக் மௌனத்தைக் கலைத்தான்.

"கோழையாகாதீர்!"

"நாங்கள் கோழைகளல்லர். குழைந்து கொடுத்துக் கொல்லுங் குணம் கொண்டவர்கள். பதுங்கிப் பாய்வது எங்கள் பரம்பரைப் பண்பு"

"எங்கள் பரம்பரை மட்டும் என்ன? உங்கள் இனத்திற்குக் கொஞ்சமும் இளைத்ததல்ல. சிரித்துச் சிரித்துச் பெரிய அரியாசனங்களை உருட்டிவிட்டு விடுவோம். பெரிய மண்டலங்களையெல்லாம் மண் வெளிகளாக்கிவிடுவோம். வெள்ளைத் தோலால் பளபளப்பும், மினுமினுப்பும் துணைகொண்டு வீழ்த்திவிடுவோம் வீரர்களை!"

"ஆம், பண்பில் ஒருவரே, இனம் மட்டுமென்ன? நீங்கள் தவிட்டு நிறம், நாங்கள் மஞ்சள் நிறம்"

"பெருமையடிக்க நேரமில்லை. ஒவ்வொரு விநாடியையும் ஆயிரம் சவரன்களாகக் கருத வேண்டும்"

"அது சரி, இப்பொழுது வாள் எடுக்க முடியாது. நாங்கள் வந்தவர்கள். நீங்களோ வாள் எடுக்கும் பழக்கமே இல்லாத பரம்பரை. எங்களிடமோ படை யில்லை. காரியமோ பெரியது. நினைக்கவே பயங்கரமானது"

"அலெக்சாந்தரைவிட அலிவர்திகான் வீரனோ?"

"ஏன் இப்போது அந்தப் பிரச்சினை?"

"அவசியத்திலும் அவ்வசியம். இந்தியாவில் ஏற்றிக்கொண்ட நஞ்சு பாபிலோனியாவில் வேலை செய்தது"

"பாவையரும், மருத்துவரும் நஞ்சையூட்டி விட்டனராமே அலக்சாந்தருக்கு! கேள்விப் பட்டுள்ளோம். நஞ்சு—பாலேந்திய பருவமிக்க பாவை—புரிந்தது, புரிந்தேவிட்டது!"

"புரியாமல் என்ன? இது உங்களுக்குப் பழகிய பாடந்தானே?"

"சரி காரியம் விரைவில்!"

"நாளையே, நாளையே!"

அவர்கள் விட்ட பயங்கரச் சிரிப்பை அந்த மண்டபம் ஒலி பரப்பியது! (தொடரும்)

பாரதிதாசன் பரம்பரை

ஓவியன்

சிறுசிறு கோடேனும் சிற்றுளியால்
தேர்ந்த தூரிகை தரும்நிறத்தால்
உறுதி யுண்மை படிநோக்கால்
ஓவியம் வரைந்து மகிழ்வித்தாய்!

ஆழப் புதைந்து கிடக்கும்ஒளி
அழகு மணியை அகழ்ந்தெடுத்துச்
சூழப் படர்ந்த இருளகற்றித்
தொல்கவிச் சித்திரம் தருவோனே?

வாய் பேசாத உயிர்கட்கு
மாந்தர் இழைக்கும் கொடுமையெல்லாம்
காய்ந்து மனத்தைச் சுடுமாறு
கலையால் உணர்த்தும் கவிமனத்தோய்!

பஞ்சை மக்களின் சேரியையும்
பசியால் வாடித் தம்உயிரை
நெஞ்சில் லார்க்கே நீர்வார்க்கும்
நீதி காணு மக்களையும்,

அஞ்சி மறந்து வாழ்வோர்க்கே
அதனைக் காட்ட உயிர்துடிக்கும்
செஞ்சொல் பேசும் சித்திரங்கள்
தீட்டும் உன்பன் திறனென்னே!

நாகன் என்ற புனைபெயருள்ள தோழர் நா. கணேசன் காட்டரசன்கோட்டையைச் சேர்ந்தவர். தமிழ் ஆர்வமுடைய இளைஞர். ஓவியனைப் பற்றி அவர் தீட்டிய கவிதை ஓவியம் இது. — ஆசிரியர்



எழுதியவர்:

மு. அண்ணாமலை

இலக்கிய விமரிசகர்கள்

செத்த பிணம்போல் கிடக்காமல் ஏதோ கலகலப்புடன் சண்டையும் வம்புமாக இருந்தால்தான் அறிவு விரிய இடம் உண்டாகும்

ரஷ்யக் கவிதைகளைப் படித்தேன். அதில் குறிப்பிடத்தக்க ஒரு வசன கவிதை இருந்தது. இலக்கிய விமரிசகர்களைப்பற்றி அதுவிவரிக்கிறது. அதை இயற்றிய ஆசிரியர் அந்தக் கவிதைக்கு 'முட்டாள்' என்று பெயரிட்டிருக்கிருர். உலகத்திலுள்ள எல்லா எழுத்தாளர்களின் பொதுவான கருத்தும் இலக்கிய விமரிசகர்களுக்கு எதிரானதாகத்தான் இருக்கிறது.

இலக்கிய விமரிசகர்களிடம் எந்தப் புத்தகத்தை நீட்டினுலும், எந்த எழுத்தாளர் பெயரைக் குறிப்பிட்டாலும், அவர்கள் உடனே அதை மறுப்பின்றி ஏற்றுக்கொண்டு விடுவதில்லை. அப்படி ஏற்றுக்கொண்டால் தங்களின் திறமைக்கும் மதிப்புக்கும் ஏதோ பெருமை குறைந்து விட்டதாக எண்ணுகின்றனர். "இது மட்டம்" "அது சரியல்ல" என்று ஏதாவது சொல்லித்தான் அவர்கள் வாழ்வு நடைபெற வேண்டியிருக்கிறது. 'கோல்டுஸிமித்' கூறுவது போல ஆசிரியரின் புத்தகங்களில் குறைபாடு இல்லாவிட்டால் தனிப்பட்ட வாழ்க்கையைப் பற்றி எழுதிச் சந்திக்கிழுத்துத்தாறுமாருகத் திட்டிக் கொண்டிருப்பார்கள். வாசகர்களுக்கும் எழுத்தாளர்களுக்கும் இடையிலே நின்றுகொண்டு 'ஜால்சாப்' செய்யும் தரகுக்காரர்கள்தான் இவர்கள். மக்களுக்கு "நல்ல புத்தகம் இது; நல்ல சரக்கு இது" என்று ஆராய்ந்து, இலக்கியச் சுவைக்கு வழிகாட்டுவதாக சொல்லிக்கொண்டும் பித்தலாட்டம் செய்வார்கள். சும்மா கிடக்கும் ஒரு ராமலிங்கம் இவர்கள் கையில் ஒரு சுதந்திரக் கவியாகலாம். திறமையுள்ளவன் மறைக்கப்படலாம். இப்படி, இலக்கிய உலகத்தைக் 'கழைக் கூத்தா'க ஆக்கிக் காட்டுபவர்கள் இவர்கள் என்ருலும், அதனுல் இலக்கியச் சுவையாளர்களுக்குத் தனிச் சுவை யொன்று ஏற்படுகிறது என்பது மெய்யே! செத்த பிணம்போல் கிடக்காமல் ஏதோ கலகலப்புடன் சண்டையும் வம்புமாக இருந்தால்தான் அறிவு விரிய இடம் உண்டாகும். இந்த அடிப்படையின் பேரிலும், அதனுல் ஏற்படும் அவசியத்தின் பேரிலும் தான் இலக்கிய விமரிசகர்கள் பொதுவாக வெறுக்கப் பட்டாலும், உயிரோடு வாழமுடிகிறது.

இது உலகெங்கும் உள்ள இலக்கிய விமரிசகர்களைப் பற்றிய பொதுவான கருத்தாகும்.

இந்தத் தமிழ் நாட்டை எடுத்துக் கொண்டால் நாம் கொஞ்சம் வருந்த வேண்டியவர்களாகவே இருக்கிறோம். இங்கே இன்னும் இலக்கிய விமரிசகர்கள் உண்டாகவில்லை. தோன்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொண்டால், அரை குறையாகத் தெரிந்தவர்கள் இலக்கிய விமரிசனம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள்; எல்லாம் தெரிந்ததாக 'அம்பக்' செய்கிறார்கள் என்பதைச் சொல்லித்தான் ஆகவேண்டியிருக்கிறது. அயல் நாட்டு இலக்கியங்கள் ஒன்றிரண்டு பார்த்திருக்கிற அளவிலே தாங்கள் எல்லாம் அறிந்து கொண்டதாகப் பாவனை செய்கின்றனர். யாராவது மேனாட்டு ஆசிரியரின் முத்திரைக்குக்கீழே கருத்துக்களை வெளியிடுவதைப் பெருமை என்று எண்ணுகின்றனர். தமிழ்நாட்டிலுள்ள இலக்கியங்களைப் பற்றிய வரன் முறையான வரலாறு இவர்களுக்குத் தெரியவில்லை. இன்னும் சிறப்பாகச் சொன்னால் இவர்களுக்குத் தமிழே சரியாக எழுதத் தெரியவில்லை. தமிழ் மரபு, தமிழ் நடை, தமிழ் இலக்கணம் முதலியனவற்றை நன்கு அறியாதவர்கள். இத்தகையவர்களால் இன்றைய நிலையிலே தமிழ் இலக்கியம் நன்மையடையா விட்டாலும், தமிழ் நாட்டில் இலக்கிய விமரிசனம் உண்டாக வழிவகுத்தவர்கள் என்ற பெருமை அவர்கட்கு என்றும் உண்டு.

ஒரு இலக்கிய விமரிசகர், கவிஞர் பாரதிதாசனைப் பற்றிக் குறிப்பிடும்போது, "சில வார்த்தைப் பிரயோகங்கள் தமிழ் மரபுதெரிந்த தமிழ்க் காதுக்கு அபசுரமாய் விழுகின்றன" என்று எழுதுகிறார். கவியரசரைக் குறை கூறும் இவரது தமிழ் நடையைப் படிக்கும்போது 'எஞ்சின்' சப்தம் காதைத் துளைத்து, குறும்பி அளவாய்க் குடைந்தெடுப்பதுபோல் இருக்கிறது. 'முத்தம் கொடுத்தான்' என்று எழுதுவதற்கு முத்தினான் என்று எழுதுகின்றார். இவரது புத்தகத்தில் எண்ணற்ற இடங்களில் இந்தச்சொல் திரும்பத் திரும்ப வரும்போதெல்லாம் 'தமிழ் மரபு தெரிந்த தமிழ்க் காதுகளுக்கு அபசுரமாய்' விழுகின்றது. முத்தினான் என்பது 'முத்தம் கொடுத்தான்' என்ற இரண்டு சொற்களுக்குரிய ஒரே சொல், அதாவது வினைச்சொல் என்று ஆசிரியர் தவறாக எண்ணியிருக்க வேண்டும். சில பெயர்ச் சொற்கள் வினையாகமாட்டா என்ற தமிழ் மொழி இயல்பை அவர் அறிந்திருக்க முடியாது. 'சட்டம் செய்தான்' என்பதனைச் சட்டினான் என்றோ, 'குற்றம் செய்தான்' என்பதனைக் குற்றினான் என்றோ, எழுத முடியாது.

இதுபோன்றே, தமிழ்நடை தமிழ் மரபு, தமிழ் மொழி ஆகிய மூன்றையும் சரிவர உணராத தமிழ் எழுத்தாளர்களும், இலக்கிய விமரிசகர்களும் இந்தத் தமிழ்நாட்டில் அநேகர் உள்ளனர். 'மறுமலர்ச்சி' என்ற பெயரால் தங்களை மறைத்துக்கொள்ள அவர்கள் எண்ணுகின்றனர்.

மேனாட்டு இலக்கியங்களைப் பற்றிய முழு அறிவோ அன்றி தமிழ் இலக்கியங்களைப் பற்றிய முழு அறிவோ இன்றி 'வெத்து வேட்டு விமரிசகர்கள்' தமிழில் தகிடுதித்தம் செய்ய ஆரம்பித்திருக்கிறார்கள். இந்தத் தகிடுதத்தக்காரர்களுக்கு ரஷ்யக் கவிஞர் இவான் துர்கானேவ் எழுதியிருக்கும் கவிதை சரியான சூடாகும்! அந்த வசன கவிதை அப்படியே கீழே வருகிறது.

O O O

முட்டாள்

முட்டாள் ஒருவன் இருந்தான். நெடுநாள் அவன் மன அமைதியோடு வாழ்ந்து வந்தான். ஆனால் நாளாவட்டத்தில், 'அவன் ஒரு முட்டாள்' என்று எல்லோரும் பேசிக்கொள்வது அவன் காதிற்கு எட்டியது.

அந்த முட்டாள் பெரிதும் வெட்கமடைந்தான். அந்தப் பழிச் சொல்லை எப்படியாவது போக்கிக் கொள்ளவேண்டுமென்று விரும்பினான்.

திடீரென்று ஒரு யுக்தி அவனுடைய மக்கிய மூளையிலே தோற்றம் பெற்றது. நேரம் கடத்தாமல் அதைச் செயலாக்க முற்பட்டான்.

ஒரு நண்பன் அந்த முட்டாளைத் தெருவில் சந்தித்தான். நண்பன் அவனிடம் பேசிக்கொண்டிருக்கையில் ஒரு ஓவியனைப்பற்றி மிகவும் உயர்த்திச் சொன்னான்.

"நான் சொல்லுகிறேன்: ஓவியன் இந்தக் காலத்திற்குச் சரியானவன் அல்ல; புதுமைக்கும் அவனுக்கும் ஒத்துவராது" என்று கோபத்தோடு முட்டாள் கத்தினான். மேலும் தொடர்ந்து, "நான் அவனை உயர்ந்த ஓவியன் என்று ஒப்புக்கொள்ள முடியாது; காலத்தோடு ஒட்டி வளரும் ரஸனை உன்னிடம் இல்லை" என்றான்.

அந்த நண்பன் ஒரு கணம் திகைத்தாலும், அதை ஒப்புக் கொண்டு போய்விட்டான்.

பின்னர் மற்றொரு நண்பனைச் சந்தித்தான். அவன் முட்டாளிடம் "நான் நேற்றுப் படித்த அந்தப் புத்தகம்......ஆகா! மிகவும் உயர் தரமாக எழுதப்பட்டுள்ளது!......" என்று சொன்னான்.

"உனக்கு வெட்கமாக இல்லை! அந்தப் புத்தகமா?......

"நான் சொல்லுகிறேன். ஒன்றுக்கும் பயனில்லை! என்ன புதிய விஷயம் அதில் இருக்கிறது? காலத்தோடு ஒட்டிய ரஸனை உன்னிடம் இல்லை" என்று முட்டாள் சட்டென்று பதில் அளித்தான்.

மூன்றாவதாக ஒரு நண்பன் வந்தான். அவன் தனது மற்றொரு நண்பனைப்பற்றி மிகவும் புகழ்ந்து பேசினான்.

"நான் சொல்லுகிறேன். உன் நண்பன் ஊரறிந்த காவாலி; குடிகாரன்; அவனுடைய சுற்றத்தினர் பலருக்குத் தீங்கிழைத்திருக்கிறான்.........எல்லோருக்கும் அது தெரியும். காலத்தோடு ஒட்டி உண்மை அறியக்கூடிய திறமை உன்னிடம் இல்லை" என்று வழக்கமான மறுமொழியை உதிர்த்துத் தள்ளினான். மூன்றாவது நண்பன் வெட்கப்பட்டு, முட்டாளின் சொற்களை நம்பிச் சென்றான். தனது நண்பனின் உறவையும் உடனே அறுத்துக்கொண்டான்.

தன் முன்னிலையில் எந்த நூல் புகழப்பட்டாலும், யார் புகழப் பட்டாலும் இப்படியே மறுத்துக் கொண்டிருந்தான் முட்டாள். சில சொற்களை வைத்துக்கொண்டே அவனது 'உருட்டல் வேலை' நடந்தேறியது!

சில சமயங்களில் யாரையேனும் பார்த்தால், "பெரிய அறிஞர்களின்



[போட்டிப் பைத்தியம் பிடித்த கணவர் தன் மனைவியைப் பார்த்துப் பேசுகிறார்]

மனைவி: என் அலங்காரம் எப்படிங்க இருக்குது?

கணவன்: இடமிருந்து வலம் ரவிக்கையும், மேலிருந்து கீழ் புடவையுமா இருக்குது.

வார்த்தைகள் அனைத்தும் சரியென்று நினைக்கிறீர்களா?'' என்று கேட்பான்.

இதனால் பலரும் அவனை, ''மகா கெட்டிக்காரன் — திறமைசாலி...... அடடா! எவ்வளவு அறிவு!'' என்று பேசிக் கொள்ள ஆரம்பித்தனர். ''எப்படிப் பேசுகிறான்...... அவனிடம் ஒரு தனித்திறமை இருக்கிறது ....!'' என்று மற்றவர்களும் பேசிக்கொண்டனர்.

இதன் பயனாக ஒரு ஆசிரியர் முட்டாளைத் தன் பத்திரிகையின் விமரிசன கர்த்தாவாக இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

யாராயிருந்தாலும், எந்தப் புத்தகமாயிருந்தாலும், தெரிந்ததோ தெரியவில்லையோ அதைப்பற்றிக்கவலைப்படாமல், தன் நண்பர்களிடம் கூறி வந்த வாசகங்களையே ஒரு எழுத்துத் தவறாமல் எழுதித் தள்ளினான்.

பெரிய பெரிய அறிஞர்களைத் தாக்கி எழுதியவுடன் 'இலக்கிய விமரிசகன்' என்ற பெயர் தானாக வந்து தொத்திக் கொண்டது. இளைஞர்கள் அவனைப் போற்றினார்கள். அவனுக்குப் பயப் பட்டார்கள்.

அந்த இளைஞர்கள் என்னசெய்வார்கள்! பாவம்!

முட்டாள் சொல்லும் பொது விதிப்படி, யாரையும் புகழக் கூடாது என்றாலும் அவனை மட்டும் புகழலாம் இல்லாவிட்டால் 'காலத்தோடு ஒட்டிய ரஸனை உன்னிடம் இல்லை' என்று சொல்லி விடலாம் அல்லவா!

முட்டாள்கள் கோழைகளைப் பயன்படுத்திக்கொண்டு முன்னேறி விடுகிறார்கள்!

○ ○ ○

இந்த வசன கவிதை 1878ம் ஆண்டில் எழுதப்பட்டது. ரஷ்யாவில் இலக்கிய உலகத்தில் திரிந்து கொண்டிருந்த விமரிசகர்களுக்கு மறைவாகக் கொடுக்கப்பட்டதாகும் இது!

இலக்கிய விமரிசகர்களிடம் ஊழல்கள் காணப்பட்டாலும்,

இலக்கிய விமரிசனம் மிகவும் போற்றப்படுகிறது. அது இலக்கிய ஆக்கத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவது என்பதனையும், அது ஒரு கலையாகத் தனித்து வளரக்கூடியது என்பதனையும், உலக இலக்கியங்கள் நமக்குக்காட்டி வருகின்றன.

ஒரு நல்ல விமரிசகனுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட மொழிப் பயிற்சி இருக்கவேண்டியது அவசியமாக இருக்கிறது. இலக்கிய விமரிசனம் என்பது ஒப்பு நோக்கித் தெளிவுகூறும் வேலையாகையால் மற்ற மொழிகளின் இலக்கியப்போக்கு அவனுக்குத் தெரிந்திருப்பது நல்லது. சிறந்த விமரிசகர்கள் என்று கருதப்படும் ஆங்கில விமரிசகர்கள் பலர் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகளை அறிந்திருக்கின்றனர். அப்பொழுது தான் அவர்கள் எந்தப் பொருளைப் பற்றியும் தீர்மானமான கருத்துக்கொள்ள முடியும். காம் பெக்ளேக் சொல்லுவதுபோல விமரிசகர்கள் நீதிபதிகள். புத்தகங்களையும் புத்தகம் எழுதியவர்களையும் இவர்கள் நேர்மையோடு, விருப்பு வெறுப்பின்றி விசாரணை நடத்துவார்களானல் இலக்கிய உலகம நன்கு விரிவடையும. ஒருநல்ல விமரிசகன் ஒவ்வொரு வாசகனையும் ஒவ்வொரு குட்டி விமரிசகனுக ஆக்கிவிடுகிருன். அது தான் அவனது உண்மையான வெற்றி! ஒரு புத்தகத்தைப் படித்த அளவிலே எல்லோரும் அதைப்பற்றி ஒரு முடிவுக்கு வந்து விடுவதில்லை. "நன்ருக இருந்தது"—"மட்டம்" என்ற இந்த வழக்கமான சொற் கோவைகளை எல்லோரும் கூறி விட முடியும். ஆனல் "ஏன்?" என்றகேள்வியை எழுப்பிக் காரணம் காட்ட முயற்சிக்கும் போது தான் இலக்கிய விமரிசனம் முளைவிட ஆரம்பிக்கிறது. விமரிசகனுக்கு ஒரு எழுத்தாளனை விடப் பத்து மடங்கு விரிவான அறிவு வேண்டும். எழுத்தாளனுகவும் விமரிசகனுகவும் இருக்கும் சிலர் அடிக்கடி சிக்கலிலே மாட்டிக்கொண்டு விடுவார்கள். தனக்குள்ள குறைபாடுகளை, (அதாவது தனக்குத் தெரிந்தும் விலக்க முடியாது இருக்கும் குறைபாடுகளை) நீக்கி மற்றவைகளைப் பற்றி இவர்கள் விமரிசனம் செய்வார்கள். அல்லது தாங்கள் பிறர்மேல் காட்டும் குறைபாடுகளுக்கே தாங்களும் ஆளாகியிருப்பார்கள். அவர்கள் காட்டிய அளவுகோலே அவர்களை 'மிகமட்டமான எழுத்தாளர்கள்' என்பதை வெளியாக்கப் போதுமானதாயிருந்தால் அதைவிட அவலம்வேறென்ன வேண்டியிருக்கிறது? ஜான்ஸன், ஷேக்ஸ்பியரைப் பற்றிப் பல குறைகள் கூறினுர். ஆனல் அவரும் அதே குறைகளுக்கு ஆளாகியிருப்பதை மெக்காலே என்பவர் இடித்துக்காட்டி எழுதினுர். விமரிசகன் ஒவ்வொரு சொல்லையும் சிந்தித்தே எழுத வேண்டும். விமரிசனம் என்பது கத்திமேல் நடப்பதை விடக் கடினமானது.

மனிதன் சொந்தமான, தனிப்பட்ட விருப்பு வெறுப்புகளையுடையவன், என்றபொது விதி, அல்லது பொதுவான கோளாறு இலக்கிய விமரிசனத்தையும் மறுவடையச் செய்து விடுகிறது.

இந்தத் தமிழ் நாட்டிற்கு இலக்கிய விமரிசனம் 'புதிய சரக்கு' என்று பலர் கூறிவருகின்றனர். இலக்கிய விமரிசனம் ஒவ்வொரு மொழியிலும் இருந்து வந்திருக்கிறது. ஆனால் முறைகள் வேறுபட்டிருக்கலாம். இலக்கிய விமரிசனம் எதற்காகத் தேவைப்படுகிறதோ அந்தத் தேவையைத் தமிழ்நாட்டார் பல வகைகளில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கின்றனர். ஒன்று உரையெழுதுதல்; இரண்டாவது அரங்கேற்றம செய்தல்; மூன்றுவது அணியிலக்கணம் செய்தல் என்பதாகும். உரையெழுதுதலில் நிறைந்த புலமையுள்ளவர்களே இறங்கினார்கள். அதிகார வைப்பு முறையையும் சொற்கோர்வையைப் பிரித்துச் சொல் வைப்பு முறையையும் பற்றித் தங்களின் கருத்துக்களை வெளியிட்டனர். இன்ன சொல்லுக்குப்பின் இன்ன சொல் ஏன் கொண்டார் என்று இவர்கள் ஆராய்ச்சி செய்தனர். இவர்களது ஆராய்ச்சி சில இடத்தில் பொருந்தியது; சில இடத்தில் நயமாக இருந்தது; ஆனல் பல இடங்களில் அது தேவையற்ற முறையாகவும் காணப்பட்டது- உரைகளில் மாற்றம் கூறினர். இந்த உரையாசிரியர்களின் ஒரு பெருங்குறை ஆசிரியனிடத்திலே கண்ட எந்த வழுவையும் இவர்கள் மூடி மெழுகிச் சமாதானம் கூறி 'வழுவமைதி' என்று கொண்டதேயாகும். தான் உரையெழுத மேற்கொண்ட நூலைப் பற்றியும், ஆசிரியனைப்பற்றியும் இவர்கள் தெய்வ அருளோடு தொடர்பு படுத்தியே பார்த்ததாலும், 'கட்டிய விட்டுக்குக் குறை சொல்லக் கூடாதே' என்ற கோழைத்தனத்தாலும் திடமாக, தப்பென்று பட்டதை எடுத்துக் கூறமுடியவில்லை. இந்தக் குறையை ஒருவாறு நூல் அரங்கேற்று விழாக்கள் தீர்த்து வைக்க முயற்சித்தன. உரையெழுதுபவர்கள் பெரும்பாலும் இலக்கணப் பண்டிதர்களாகவே இருந்தனராதலால் சொற்றொடர் அமைப்புக்களையே ஆராய்ச்சி செய்தனர்.

அறிஞர்கள் பலர் கூடியிருக்கும் அவையிலே, நூல், எழுதியவரால் படித்துக் காட்டப்படும். அப்போது அங்கிருக்கும் அறிஞர்கள் அந்த எழுத்தாளனிடம், அந்த நூலில் எழுந்த ஐயங்களை வினவுவார்கள். இதுபோன்ற அவையங்கள் எழுத்தாளனின்குறைபாடுகளைக் காட்ட முடிந்தன. ஆனல் புலவர்களுககிடையே ஏற்பட்ட பொறுமை இந்த முறையையும பயனற்ற தாக்கிவிட்டது. இதனல் இலக்கிய விமரிசனத்தின் தேவை தீர்க்கப் பட்டது என்று சொல்ல முடியாது. ஒவ்வொரு புலவனும் மற்றொரு புலவனை மட்டப் படுத்த வேண்டும் என்றே வாய்ப்புத் தேடிக் கொண்டிருந்தான். 'சமயோசிதபுத்தி' உள்ளவன் நாட்டில் கெட்டிக்காரன் என்ற பட்டத்தை வாங்கிக் கொண்டான்.

அணியிலக்கணம், உவமை நயங்களைப் பற்றியும், கருத்துக்களை வெளிப்படுத்தும் சொற்றொடர் முறைகளைப் பற்றியும ஆராய்ச்சி நிகழ்த்தியது. இந்த இலச்கணம் சமஸ்கிருதம் படித்த தமிழறிஞர்களால் விரி

வாக எழுதப்பட்டது சமஸ்கிருத இலக்கிய அறிவு இருந்ததால் தமிழ் இலக்கியங்களோடு ஒப்ப நோக்கும் வாய்ப்பு ஏற்பட்டது. இரண்டு மொழியறிவு பல அறிஞர்களுக்குப் புதிய திட்டத்தையும் உள்ளத் திடத்தையும் நல்கியது. அத்தகையோரில் சேனாவரையரைக் குறிபிப்பிடத்தக்க விமரிகர் என்று கொள்ளலாம். இவருக்கு இரண்டு மொழியறிவு இருந்தது. இவரைப் பின்பற்றி, பரிமேலழகர், சிவஞான முனிவர் போன்றவர்கள் வந்தாலும் அவர்களது வடமொழியறிவு அவர்களுக்குத் தீங்கையே பயந்தது. நூலாசிரியரின் உள்ளத்தைத் தங்களின் உள்ளத்திற்கேற்பத் திரித்தெடுத்துக் கொண்டனர். இதனால் பலர் கருத்து மாறுபாட்டைக் காட்ட முன்வந்தனர். அதனாலும் விமரிசனக் கலையின் பயனை ஒருவாறு எய்த முடிந்தது. வாசகர் பல கருத்துள்ள பல உரைகளையும் ஒப்ப நோக்கிப் புலவரின் உண்மையான கருத்தை அறிய வாய்ப்பிருந்தது.

இவ்வாறு, தனித்து நிற்பதின்றி அங்கங்கு பாலில் வெண்ணெய்போல் கரந்து நின்ற தமிழ் இலக்கிய விமரிசனம் இடைக்காலத்தில் உருவில்லாமல் அழிந்துவிட்டது.

இந்த நிலையிலே ஆங்கில முறைப்படி வருகின்ற இலக்கிய விமரிசனம் தமிழ் நாட்டுக்குப் புதிதாக இருக்கின்றது. ஆங்கில முறைப்படி கதை உறுப்பினர் அமைப்பு மிகவும் முக்கியமானதாகக் கொள்ளப்படுகிறது. நூலைப் ப்ற்றிய பொதுக் கருத்து, நூலாசிரியனின் மனநிலை, அந்நூலில் கண்ட விஷயங்களுக்கும அவன் வாழ்க்கைக்கும் உள்ள தொடர்பு, மொழிநடை, முதலியவைபற்றி ஆங்கிலேயர்கள் மிகவும் ஊக்கத்துடன் கவனிக்கின்றனர்.

மில்டன் இசைக் கலையைப் பற்றித் தன் பாடல் ஒன்றில் மிகப் புகழ்ந்து எழுதினார். மில்டனைப் பற்றி எழுதும் விமரிசகர் இசையின்மீது மில்டனுக்கு ஏன் அவ்வளவு விருப்பம் இருந்தது என்பதை அவரது வாழ்க்கை நிகழ்ச்சிகளுடன் ஒட்டவைத்துக் காட்டுகிறார். மில்டனின் தந்தையார் ஒரு பாடகர், இசை ரஸிகர் என்பதனையும் விமரிசர் குறிப்பிடுகிறார். இவ்வாறு எழுத்தாளனின் வாழ்க்கை நிகழ்ச்சிகளிலிருந்தே நூலின் உட்கிடைகளை உணரவைக்கின்றனர் மேனாட்டார்.

எழுத்தாளன் தன் உள்ளக் கருத்தை எல்லாக் கதை உறுப்பினர்கள் வழியாகவும் கொட்டிவிடக்கூடாது. ஒவ்வொரு கதா பாத்திரமும் ஒவ்வொரு அடிப்படையான உள்ளுணர்வைக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்க வேண்டும். சூதாடி, வஞ்சகன், பூசாரி, ஜோஸ்யன், கோமாளி இப்படிப் பலவகையான கதாபாத்திரங்களைக் காட்டும்போது அவரவர்களுக்குரிய வாசகங்களைக் கொடுப்பதில் எழுத்தாளன் கவனத்துடன் இருக்க வேண்டும். வேலைக்காரன் திடீரென்று பூமியின் இழுக்கும் சக்தியையோ, அணுக்குண்டு எந்த ஆண்டில் எப்பொழுது கண்டு பிடிக்கப்பட்டதென்றோ பேசுவதாக எழுதுவதை ஒப்ப

பாராட்டுகின்றனர்

பொங்கல் நன்னளிலே மலர்ந்த பொன்னி மலர் ஒரு இலக்கியப் பூங்காவாகவே அமைந்திருக்கின்றது. கண்ணேப்பறிக்கும் வண்ணச் சித்திரங்களும், கருத்துக்கினிய இலக்கியக் கட்டுரைகளும் மலரைப் பரிமளிக்கச் செய்கின்றன. ஓவியர்களின் முயற்சிகள் பாராட்டத் தக்கன...மணங் கமழும் பொன்னி பொங்கல் மலர் கன்னித் தமிழின் பெருமையைக் கூறும் ஓர் உன்னதமான கலேப் பணியாகும்

சுன்னகம் ஈழகேசரி 27-2-49

*

இவ்வருஷப் பொங்கல் மலர்களிலேயே பலவகையிலும் தலே சிறந்து விளங்குகிறது பொன்னி மலர். தமிழ் நாட்டிலுள்ள பேரறிஞர்கள், பேச்சாளர்கள், பத்திரிகாசிரியர்கள், எழுத்தாளர்கள் பலருடைய கட்டுரைகள், கதைகளும், இன்றைய இளங் கவிஞர்களில் பலரின் கவிதைகள், பெரியார், அண்ணுத்துரை, பாரதிதாசன் போன்ற கழகப் பிரமுகர்களுடைய அருமையான கட்டுரைகளும் கவிதைகளும் இம் மலரைச் சிறப்பிக்கின்றன. வண்ண ஓவியங்களும் நகைச் சுவைச் சித்திரங்களும் மலருக்குச் சோபையைத் தருகின்றன. மேலட்டைப் படமும் கவர்ச்சிகர மாகவே இருக்கிறது.

பிரசண்டவிகடன்- 1-3-49

முடியாது. இந்த முறையில் மேனுட்டார் இலக்கிய விமரிசனத்தை நிகழ்த்திவருகிருர்கள்.

மேனுட்டு இலக்கிய விமரிசனம் எப்படித் தோன்றிற்று? அதன் முழு விபரம் என்ன? அதை எப்படித் தமிழில் படிப்படியாகக் கொண்டுவரவேண்டும்? இவற்றை இன்றையத் தமிழ் இலக்கிய விமரிசகர்கள் சற்று நினைக்கவேண்டும்.

பண்டிதர் பரம்பரையில் மறைமலே அடிகளார் மேனுட்டு முறையை ஒட்டி முல்லேப்பாட்டுக்குப் புதியதொரு உரை வகுத்தார். அவர் நீங்க, புதுமைப்பித்தன் இந்த முயற்சியைத் துவங்க வேண்டும் என்றுவிரும்பினூர். 'சிறுகதை' என்பதுபற்றி வானெலியில் பேசினூர். 'நமது இலக்கியம்' என்று சிறு புத்தகம் எழுதினூர். அந்தப் புத்தகம் அவரது எண்ணத்தின் சின்னமாக இருந்ததேதவிர வெற்றியாக இல்லே! தமிழில் இலக்கிய விமரிசனத்தை முதலில் கொண்டுவந்தவர்களில் திரு. சுப. நாராயணனும் ஒருவராவார். அவரது "கவிதை, கலே, விமரிசனம்" என்ற நூல் 500 பிரதிகளே அச்சிடப்பட்டு வெளிவந்தது. தமிழ் நாட்டில் அதிகமான ஆதரவையும், அதற்கான புகழையும் அது பெற முடியவில்லே! மற்றும் பத்திரிகைகளிலே துண்டு துண்டாகக் கட்டுரைகள் எழுதிக்கொண்டு வருபவர் திரு ரா ஸ்ரீ. தேசிகன் ஆவார். இவரது கட்டுரைகள் மேனுட்டு எண்ணங்களேக் கோர்வையாகக் காட்டுகின்றன. இவை, தோன்ற இருக்கும் பல இளம் விமரிசகர்களுக்குத் துணையாக இருக்கும். இன்னும் இந்தத் துறையில் முயற்சித்துக் கொண்டிருப்பாரில் நண்பர்கள் ரகுநாதன், அ. ச. ஞானசம்பந்தம் ஆகியோரை இங்கே குறிப்பிடலாம்.

உயர்திரு உல்லாசம் அவர்கட்கு

3. ஒரே ஒரு கதை

ஆமாம். கதைதான். உண்மையாக நடந்தது, நடக்கிறது என்றால் உலுத்துப்போன உங்கள் உள்ளம் ஒப்புக்கொள்ளாது; நம்பாது. அதனால்தான் கதை என்ற பீடிகையோடு ஆரம்பிக்கின்றேன் இக் கடிதத்தை!

புத்தர் சித்தார்த்தராயிருந்த காலத்தில் அவருக்குத் துன்பமென்றால் என்னவென்றே தெரியாதாம். கவலை என்றால் கடையிலே விற்கும் சரக்கு என்று எண்ணிக்கொண்டிருந்தாராம். அதாவது, துன்பம் கவலை என்பவற்றின் நிழலே அவரது நெஞ்சில் விழாதவாறு அவ்வளவு கவனிப்புடன் வளர்த்து வந்தார்களாம். உலகத்தின் உண்மைச் சித்திரங்களை மறைத்துவிட்டுப் போலிச் சித்திரங்களை வரைந்து காட்டினர். ஆனால் அவரே ஒருகாலத்தில் துன்பம், துயரம், பசி, பட்டினி முதலியவற்றை உணர்ந்தார். அவற்றை ஒழிக்க ஒரு உன்னதமான மார்க்கத்தையும் கண்டார். ஆனால்—

உல்லாசங்களோ, இன்னும் சித்தார்த்தர்களாகவே இருக்கின்றனர். மரணம் பசி, துயரம் முதலிய துன்பநிகழ்ச்சிகளைக் கண்ட சித்தார்த்தர் புத்தரானார். நீங்களோ பட்டினி என்று வருபவனை 'எட்டிப் போடா' என்று இடுப்பிலே உதைக்கும் கடின சித்தர்களாக இருக்கிறீர்கள். கல்மனம் படைத்த காதகர்கள் நீங்கள்! பட்டு மெத்தையிலே, பசியாற உண்டு விட்டு, மல்லாந்து கிடக்கும் உங்கள் கண்களுக்கு, கட்டாந்தரையைக் கட்டிப் புரளும் கந்தனின் வாழ்க்கையில் படிந்திருக்கும் துயரப்புழுதி, புலப்படாது. அவன் அடிபட்டால்கூட, ஏன் அழுகிறான் என்று ஆச்சரியப் படுவீர்கள். அவ்வளவு தூரம் உங்கள் உள்ளம் செல்வச் செருக்கிலே இறுமாந்து கிடக்கிறது. ஆகவேதான் கதை என்ற முறையிலே இதை ஆரமபிக்கின்றேன். படியுங்கள்!

நேற்றுத்தான் நடந்தது போல் இருக்கிறது. இப்பொழுது நினைத்தாலும் என் உடம்பு நடுங்குகிறது. அந்தச் சம்பவம், ஆம, அந்தக் கொலை பாதகச் செயலை என் முன்னே கொண்டு வரும்போதெல்லாம் எனக்கு மயக்கம் வந்துவிடும்.

கதை நடந்த இடம் ஒரு சிறு கிராமம். கதா பாத்திரங்கள் முக்கியமாக மூன்றுபேர். ஒரு சீமான், ஒரு ஏழை, ஒரு பெண். கதைக்கு வேகத்தையும் விறுவிறுப்பையும் கொடுத்து, அதை உருவாக்கிப் பின்னர் உருத்தெரியாமல் சாகடித்தவை இரண்டு வெவ்வேறான மனப்பண்புகள். ஒன்று காதல் நெறி! மற்றொன்று காமவெறி!

செல்லமுத்து கட்டுமஸ்தான காளே! இட்டபணி எதுவானுலும் பம்பரம் போல் சுழன்று தன் பணியை முடிப்பான். அந்தப் பண்ணையிலேயே மிகவும் சுறுசுறுப்பானவன். முதலியார் அவன் மீது தனிப் பட்ட அன்பு வைத்திருந்தார். யாருக்கும் இல்லாத சலுகைகள் பல தந்தார். முதலியாரின் வீட்டுக்குப் பின்புறத்திலுள்ள தோட்டத்திலேயே அவனுக்குத் தனியிடம் கொடுத்திருந்தார்.

ஆனல், அதே செல்லமுத்து மீது, சில நாட்களாக முதலியார் வர்மக் கண் வைக்கலானர். அவன் செய்யும வேலேயிலே சிறு சிறு குற்றங்கள் காண ஆரம்பித்தார். காரணம்! அதுதான் ஒரு அருமையான புதிர்!

சீமான்களின் போக்கே தனி! தேனகப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே, தீயாகச் சீறுவார்கள்! தங்கள் மனத்துக்கு ஒருவன் பிடிக்கவில்லே யென்ருல், அவனேக் குற்றவாளியாக்கிக் கூண்டிலே நிறுத்தும வரை அவர்களுக்குத் தூக்கம் வராது. அவன செய்த குற்றமென்ன? சீமானுக்குச் சீற்றம வரும்படி அவன் என்ன செய்தான்? அவையெல்லாம் நம்மால் அறிந்துகொள்ள முடியாத 'சிதம்பர ரகசியங்கள்'!

செல்லியம்மாள், செல்லமுத்துவுக்குச் சரியான ஜோடி மட்டுமல்ல, உறவு முறையுங் கூட. வயலிலே நாற்று நடும் பொழுது அவர்கள் நெஞ்சிலே காதல்விதை ஊன்றப்பட்டது. நெற்கதிர்கள் வளர வளர, அவர்கள் காதலும் வளர்ந்து கொண்டே வந்தது. முதலில் அமாவாசை நாட்களாகப் பார்த்து யாருக்கும் தெரியாமல் ஊருக்கு வெளியே தங்கள் சந்திப்பை வைத்துக் கொண்டார்கள். பயம், கொஞ்சங் கொஞ்சமாகப் பறந்தது. பிறகு, பௌர்ணமி இரவுகளிலே பயமின்றிச் சந்தித்தார்கள். இதனுலெல்லாம, இரவுக் காலங்களிலே அவன் தோட்டத்தில் தங்குவதில்லே!

ஊரிலே, வலிவும் வனப்புமுள்ள பெண்ணுகச் செல்லி விளங்கினுள். முதலியாரின நாக்கிலே எச்சில் ஊற ஆரம்பித்தது.

"செல்லமுத்துவின் முறைப் பெண்" யாரோ அவர் காதிலே போட்ட வார்த்தைகள்!

"யாருடைய முறைப் பெண்ணுயினும் எனக்குக் கவலேயில்லே. முறைப்படி, என் முத்திரை பொறிக்கப்பட்டாக வேண்டும்" வெறியிலே வெளிக் கிளமபிய தீப்பொறிகள்!

தோட்டத்துக் குடிசையிலே செல்லியின குரல் கேட்டது, ஒருநாள்.

"மச்சான்,...... நம்ம கலியாணத்தை..." என்ருள் அவள்.

"பொறு செல்லி, அறுவடை முடியட்டும். அதுக்குப் பிறகு நம்ம கல்யாணத்தை வச்சுட லாம்"

"எதுக்கு அத்தனே நாள் கடத்தறே...?" ஏக்கம், பயம் இவற்றில் எதிலிருந்து இக்

கேள்வி கிளம்பியது என்று பின்னால்தான் எனக்குத் தெரியும். செல்லமுத்து அக் கேள்விக்குப் பதில் சொன்னான். "புள்ளே, ஐயா இப்ப அடிக்கடி எம்மேலே சிறிவிழுறாரு. முன்ன மாதிரி இல்லே. இப்போ கலியாணத்துக்குன்னு பணம் கேட்டா, பணந்தான் கெடைக்குமோ அல்லது வேறு எதுதான் கெடைக்குமோ எனக்குத் தெரியாது. ஆனா, அவரு தங்கமானவர். கொணம் ஒரு மாதிரி. யாருக்குமே புடிபடாது. அறுவடை முடிஞ் சுட்டா, வேணது வாங்கலாம். அப்படியே நம்ம கலியாணத்தையும் முடிச்சுடலாம்"

அந்தத் 'தங்கமான' மனிதனின் நல்ல நோக்கம் எதுவென்று அந்த அப்பாவிக்குப் பிடிபடவில்லை. ஆனால் பெண்களுக்கு இந்த விவகாரம் எளிதில் புரிந்து விடுகிறது. செல்வி தெரிந்து கொண்டாள். முதலியாரின் காமக் கண்களிலிருந்து வெடித்துக் கிளம்பி வரும் நெருப்புப் பொறிகளைக் கண்டு கொண்டாள்; பயந்தாள். சிக்கிரத்திலேயே திருமணத்தை முடித்துவிட வேண்டுமென்று செல்லமுத்துவிடம் வற்புறுத்தினாள். ஆனால், அந்த அப்பாவியோ 'தங்கமான' மனிதரின் தயவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்.

ஒரு நாள் கிராமத்திலே கொண்டாட்டம். திரௌபதி தேவி திருநாள். 'பத்தினி'யின் கதையைப் படிக்க, வெளியூரிலிருந்து ஒரு பாகவதர் வரவழைக்கப்பட்டிருந்தார். பெண்களும், ஆண்களும் கூட்டம் கூட்டமாகக் கதை கேட்கக் கோயிலுக்கு முன்னால் வந்து கூடிவிட்டார்கள். கோயில் பின்புறத்திலுள்ள மகிழ மரத்தடியில் தன்னைச் சந்திக்குமாறு செல்லியின் 'தூது' சொல்லிற்று.

செல்லமுத்து மகிழமரத்தடியில் வந்து காத்துக்கிடந்தான். முதலியாருக்குத் தலைநோவு! அவருடைய உத்தரவு கதையை ஆரம்பிக்கும்படி கூறிற்று. கதை வளர்ந்து கொண்டே சென்றது! நேரம் பறந்து கொண்டிருந்தது. செல்லமுத்துவுக்கோ மனம் குழம்பிக்கொண்டிருந்தது. ஒரு நாளும் சொன்ன சொல் தவறியதில்லை செல்வி. இன்று மட்டும்......பாவம்! முதலியாரின் முன்னேற்பாட்டின் படி, அவரின் தனியறைக்குள் செல்லி அகப்பட்டுக் கொண்டதை அவன் அறிவானா?

(அடுத்த இதழில் முடியும்)

பிரிவு

நம் பொன்னியின் கவிஞர் மு. அண்ணாமலை அவர்களின் தந்தையார் திருவாளர் முத்தையா அவர்கள் சென்ற 27—2—49ல் தமது 63-ம் ஆண்டில் இயற்கை அடைந்தமை கேட்டு வருந்துகிறோம். அன்னார் தம் இல்லத்தார்க்கு நம் ஆறுதல்.

புது எழுத்தாளர்கள்

-நா. வேத்தரசன்-

9. நடந்த கதை

நடந்த கதை என்பதில், நமது தமிழ் நாட்டில் எழுதப்படும் எல்லா 'நடந்த கதை' களும் 'காதல்' சம்பந்தமாகத்தான் எழுதப்படுகின்றன. அதிலும் 'காமத்'தின் விளைவை விவரிப்பனவாகவே யுள்ளன. நாம் வாழும் இந்தக் காலத்தில் தவிர, தன் வாழ்வில் நடந்த, கூறத்தகாத நிகழ்ச்சிகளை எவனும் எந்தக்காலத்திலும் கூறியதாகத் தெரியவில்லை. அப்படிக் கூறியிருந்தாலும், அது நடந்ததாகக் கூறாமல், புனைகதையாகவே கூறியிருக்கிறார்கள். "நடந்த கதைகளில் கெட்ட கதைகளைத் தான் கூறுவது இயல்பில்லை, என்றாலும் நல்ல கதைகளைக் கூடவா கூறியிருக்க மாட்டார்கள்?" என்று கேட்கலாம். தன் இழிந்த போக்கை எவனுங் கூறமாட்டான் என்பது எப்படி இயற்கையானதோ, அப்படியே, தன்னைப் பெருமைப் படுத்திக் கூறிக் கொள்ள வெட்கப்படுவான் என்பதும் இயற்கை யானதுதான்.

இப்பொழுது 'நடந்த கதை' என்ற தலைப்பில் 'நடவாத கதைகளும்' வெளியிடப் படுகின்றன என்ற உண்மை எல்லோரும் அறிந்ததுதான். ஆனால், நடந்த கதைகளில், வியப்பிற்குரிய நிகழ்ச்சிகள் ஏற்பட்டதாகக் கூறக் கேட்கும் மக்கள் அதை ஆவலுடன் கேட்பதை யுணர்ந்த எழுத்தாளர்களிற் சிலர், நடந்த கதை என்ற தலைப்பில் கதை எழுதத் தொடங்கினார்கள். அதைப்பார்த்துச் சிலர் நடந்த கதைகளையே எழுதவும் துவங்கி விட்டனர். 'சுயசரிதம்' என்ற தலைப்பில் இரண்டொரு பெரிய மனிதர்கள் தங்கள் வாழ்க்கை வரலாற்றை வெளியிட்டிருப்பதை எடுத்துக் காட்டாகக் கொண்டு இந்த முறை ஆக்கம் பெற்றது.

ஆக, இப்பொழுது நடந்தகதை, நடவாதகதை எல்லாம் நடந்த கதை என்ற பெயரில் வந்தாலும் எல்லாம் 'காதல் கதை'களாகவேதான் இருக்கின்றன. வெளிவரும் இக்கதைகளிலிருந்து நாம் உணர்ந்து கொள்ளும் உண்மை என்னவென்றால், வாழ்க்கையில் நடக்கும் எல்லா நிகழ்ச்சிகளையுமே கதையாக எழுதிவிடக் கூடாது, எழுதுவதால் 'இலக்கியச் சுவைக் கேடு' தான் ஏற்படுகிறது என்பது தான்.

10. கவிதைகள்

இப்பொழுது கவிதைகள் எழுதுவது தண்ணீர்பட்ட பாடாகி விட்டது. எழுத்தாளர் என்று ஒருவர் இருந்தால் அவர் ஒரு கவிதையாவது எழுதாதவராக இருக்க மாட்டார். அப்படி யிருந்தாலும், அவர் ஆயிரத்துக் கொருவராகத்தான் காட்சிதருவார். "ஏனையா! கவிதை எழுதுவது அவ்வளவு எளிதா?" என்று கேட்டு விடாதீர்கள். 'எளி

தாக மாற்றி விட்டிருக்கிறார்கள்' இந்தக்காலத்து இலக்கிய மேதைகள். அவர்கள் சொல்வதெல்லாம், கண்டதெல்லாம் ஒன்றே ஒன்று தான். "கவிஞன் சிறைப் பறவையல்ல, விடுதலை வீரன். அவனை இலக்கணச் சங்கிலிகள் பிணைத்துக் கட்ட முடியாது. வானத்தில் பறப்பான், கடலில் குதிப்பான். கல்லுடன் பேசுவான்'' என்றெல்லாம் உணர்ச்சி ததும்பி வழியப் பேசுவார்கள். இப்படியிருப்பவனெல்லாம் கவிஞனென்றால், "அடி அஞ்சலை, ஒன்னைப் பார்த்தா ஆசை பொறக்குதடி" என்று கூறும் கவிஞன், 'கவிச்சக்கரவர்த்தி'யாகத் தான் இருக்க வேண்டும். ஆம், அவன் கவிதை, இலக்கணக் கட்டுப்பாடற்று, அஞ்சலையைக் கண்டதும் உணர்ச்சிப் பெருக்கில் வெளிப்படுகிறதல்லவா?

இன்னும் சில மாதிரிகள் இருக்கின்றன. அவை 'வசனகவிதை' என்ற தலைப்பில் வெளிப்பட்டு, தாளைக் கெடுத்து, மையைக் கெடுத்து, காசைக் கெடுத்துப் படிக்க வாங்கியவரின் ஆசையைக் கெடுத்து, 'ஐயோ தமிழ் இலக்கியமே,' என்று கூறும்படி அவருக்கு வெறுப்பை விளைவிப்பதுதான் அவற்றின் வேலை.

'நாமார்க்கும் குடியல்லோம்' என்று வீறு வெளிப்படப் பாடியவன் விடுதலை வீரனாகத்தான் இருந்தான். எனினும் இலக்கணத்துடன் தான் பாடல் எழுதியிருக்கிறான் என்பதை இந்த இலக்கண எதிர்ப்புக் காரர்கள் உணராதது வியப்பிற்குரியது தான், இவர்கள் உணராததற்குக் காரணம், இவர்கள் இலக்கணம் என்பது என்ன என்பதைப் புரிந்து கொள்ளாததுதான். இலக்கணம் படிக்கப் புகுந்த போது இவர்களுக்குத் தலைவலி ஏற்பட்டிருக்கிறது. அதனால் இலக்கணத்தை எதிர்க்கத் துவங்கி விட்டார்கள் என்பதுதான் உண்மை. மேலும் இலக்கணத்தைக் கவிதையைக் கட்டும் தளை என்ற உவமையுடன் நினைத்து நினைத்து உண்மை தெரியாமல் இவர்கள் மயங்குகிறார்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது. 'மனிதன்' என்பவன் எப்படி உயிரும், உடலும், சேர்ந்த ஒருவனோ அது போலப் பாடல் என்பது, இலக்கணமும், உணர்வும் சேர்ந்த ஒன்று என்று கூறினால் இவர்களுக்குப் புரியலாம் என்று நினைக்கிறேன். இலக்கணம் என்பது கவிஞன் தானாக ஏற்படுத்திக் கொள்ளும் வரையறை என்பதை முதலில் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

தானாக ஏற்படுத்த அறியாதவன், தனக்கு முன்காலத்தில் வாழ்ந்தவர்கள் ஏற்படுத்திய வரையறைக்குள் நின்று பாடல் எழுதுகிறான். இவை இரண்டுமற்றுத் தனக்கும் தெரியாது, சொன்னாலும் கேட்பதில்லை என்று பிடிவாதம் செய்யும் சிலர் தான் இலக்கண எதிர்ப்புக்காரர்கள்.

இவர்கள் பேச்சில் மயங்கிப் புத்திலக்கியங்கள் எழுதத்துடித்து முன் வரும் புது எழுத்தாளர்கள் பலர், இலக்கணம், ஓசை, தாளம், எதற்கும் கட்டுப்படாத, உரைநடை பாடல் என்ற இரு வகையிலும் சேராத ஒன்றை எழுதித் தங்கள் மொழிவளத்தைக் கெடுத்துக் கொண்டு விரைவில் தோல்விக் கொடியின் கீழ்ப்போய்க் களைப்பாற உட்கார்ந்து விடுகிறார்கள்.

கவிதைகள் எழுத முன்வருவோர், அதற்குரிய இலக்கணத்தைக் கற்றுக்கொண்டு எழுதுவதே நல்லது. அதை விடுத்துத் தத்தமக்குத் தோன்றியவாறெழுதி 'இது கவிதை' என்றால் அறிஞர்கள் ஒப்புக் கொள்ள மாட்டார்கள் என்பதைக் கூற விரும்புகிறேன்.

பொது மேடை

வேலூர்-21-2-49

கலைக் களஞ்சியம்

'பொன்னி' பொங்கல் மலர் அழகு வாய்ந்தது. அறிஞர் பலரின் கருத்து மணம் கமழ்வது. தமிழர் திருநாளில் தமிழர்க்கு இன்பம் தரும் பொருள்களில் கரும்பும், புதுச் சோறும், 'பொன்னி' மலரும் தலைமை வகிப்பவை. பெரியாரின் ஆராய்ச்சி மிகுந்த கட்டுரை H. G. வெல்ஸ், ஆல்டஸ் ஹக்ஸ்லி, போன்றோரின் முடிவுகளை ஒட்டியுள்ளதைக் காணலாம். இன்றைய சமுதாயத்திற்குச் சமயமும், சாமிகளும் வேண்டப்படாதன என்பதோடு சமூகம் முன்னேற வேண்டுமாயின், அவை அழிக்கப்பட வேண்டும் என்பதும் பெரியாரின் முடிந்த முடிபு. இன்றைய தேவைக்குக் குறிளைத் தந்துள்ளார். அடுத்த ஆண்டுக்குள் தமிழர் நெறி முறைப்படுத்தப்படும் என நம்புவோம். அறிஞர் அண்ணா பெரியாருக்கு சமுதாயத் துறையில் எவ்வளவு பெரிய வெற்றி கிடைத்துள்ளது என்பதை விளக்கியுள்ளார், கவிஞர் பாரதிதாசன் முப்பாங்கும் ஆழாழியும் வடக்கில் விந்தியமும் சூழ்ந்த திராவிடத்தின் மாண்பினைச் அழகாக சித்தரித்துள்ளார். மற்ற கட்டுரைகளும், கதைகளும், ஓவியங்களும் சிந்தனைக்கும், கண்ணுக்கும் சிறந்த விருந்தூட்டுகின்றன. நண்பர்கள் முருகு. சுப்பிரமணியம், பெரியண்ணன் ஆகியோரின் சிறந்த முயற்சியின் தன்மை 'தோழனே' நடத்திப் பார்த்த எனக்கு நன்கு தெரிகின்றது. கப்பல் கட்டுவதுபோல, பல் துறைகளிலுள்ள தோழர்களின் ஒத்துழைப்பைப் பெற்று 'பொன்னி' பொங்கல் மலரை வெளியிட்டுள்ளனர். அடக்கு முறைச் சூறாவளியினூடே அகமகிழ் வூட்டிய 'பொன்னி' வாழ்க! வெல்க!

ஏ. பி. ஜனார்த்தனம்

அண்ணாமலைநகர்-21-2-49

அண்மையில்தான் 'பொன்னி'' பொங்கல் மலரைக் காணும் வாய்ப்பைப் பெற்றேன். மலரைக் கண்டவுடனேயே மகிழ்ச்சி பெருக்கெடுத்தோடியது — ஏன்? முகப்பு அப்படி......! ஏடுகளைப் புரட்டினாலோ ஒவ்வொன்றும் போட்டியிடுகின்றன ....கண்ணைக் கவரும் வண்ணப் படங்களும், கருத்தையள்ளும் சிந்தனைக் கருத்துக்களும்..........அப்பாடா, அழகிய படங்கள்; அருமையான கட்டுரைகள், உள்ளத்தைக் கிள்ளும் கற்பனைச் சித்திரங்கள்...... இத்தனையும் பூத்துக் குலுங்கும் மலர்த்தோட்டம்...... என்று குன்றின் மேல் நின்று கூறுவேன் துணிவாக.

த. மா. திருநாவுக்கரசு

பம்பாய் 17-2-49

பொன்னியின் பொங்கல் மலரிலுள்ள கட்டுரைகளத்தனையும் சுவைத்த பின்னர்தான் என்மனம் நிம்மதியடைந்தது. இந்நாட்டில் அவளுடைய பாஷை புரியாத நண்பர்கள் கூட, அவளுடைய தோற்றத்தைக் கண்டு உண்மையில் மகிழ்ச்சியுற்றார்கள் சுமார் பதின்மூன்று ஆண்டுகளுக்கு முன், ''புதுவை முரசு'' விசேஷ அனுபந்தத்தை, வாசிக்கும்பொழுது இருந்த மன வருத்தத்தைப்

பொன்னி அகற்றிவிட்டாள் என்று இயம்புவது மிகையாகாது.

பி. வே. மாயன்

டில்லி-24-2-49

"பொன்னி" மூன்றாவது ஆண்டு முதல் மலர் கிடைத்தது. மலரில் மகிழ்ச்சிதரும் புதிய அம்சங்கள் பல புகுத்தப்பட்டிருப்பது கண்டு மனம் மகிழ்ச்சிகொண்டேன். ஆயினும் பொன்னி மாதமிருமுறை வெளியீடாக இருப்பதால் பதினைந்து நாட்களையும் பதினைந்து ஆண்டுகளைப் போல் கஷ்டத்துடன் எதிர்பார்த்து ஏங்குகிறது என் மனம். ஆகையினால் பொன்னியை வார வெளியீடாகமாற்றி மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவீரென்று எதிர்பார்க்கிறேன்.

திருவேங்கடம்

மதுரை-25-2-49

அண்ணாவின் வெற்றிகொண்ட வேந்தர், பொன்னிக்குப் புத்தாடை! பாரதிதாசனின் பொங்கற்பாட்டு அவளை அணிசெய்யும் புது வைரம்! பெரியாரின் 'மதமும் கடவுளும்' அவளுக்கு மகுடம்! இதிலே எதை வாசிக்கமாமல் விட்டுவிடுவது என்று யோசித்தால் விளம்பரங்கள் நினைவுக்கு வருகிறது! அதுவும் கருத்துக்களுடன் தொகுத்திருப்பதைப் பார்த்தால் மலரே மணக்கிறது! இது வாடாமலர்! படித்துக்கொண்டே இருந்த நான் இரண்டுவேளை சாப்பிடவில்லை என்றால், மிக்குரைக்கவேண்டுமா? என்ன? பொங்கலால் பொன்னி சிறந்தாள்—மலர்ப் பொன்னியால் பொங்கல் சிறந்தது!

மதுரை மன்னன்.

குருநாக்கல் இலங்கை-28-2-49

அஞ்ஞானத்தை அடிப்படையாக வைத்து, மக்களின் கண்மூடித்தனத்தின் பழக்க வழக்கங்களைத் தனக்கு ஒத்தாசையாக்கிக்கொண்டு சுயநல வியாபாரம் செய்யும் நோக்கத்தையுடையதல்ல 'பொன்னி' அந்தகாரம் சூழ்ந்துள்ள திராவிட நாட்டில் சத்தியமான வாழ்க்கையை-பகுத்தறிவுப் பாதையை—செப்பனிட்டு வருவதன் உண்மைப் படப் பிடிப்புத்தான் 'பொன்னி' பொங்கல் மலர் 1949. இந்த இருபதாம் நூற்றாண்டில் நான் வாழும் இலங்கையில் மாத்திரம் அன்றுவிஞ்ஞானத்தில் தேர்ச்சி பெற்ற மக்கள் வாழும் மேனாட்டிலும் ஒரு திராவிடன் வாழ்ந்தாலும் 'பொன்னி' யையும்—'பொங்கல்' மலரையும் மேனாட்டு நண்பர்களுக்கும் அவைகளிலுள்ள கட்டுரைகளை, கருத்துக்களைப் பெருமையுடன் மொழி பெயர்த்துச் சொல்லிக் கொடுத்து விளங்க வைக்கலாம், அவர்களும் ஏற்கும் கருத்துக்கள் நிறைந்துள்ளவை என்ற திட நம்பிக்கையால்.

கா. சிங்காரம்

அண்ணாமலை நகர்-24-2-49

"பொன்னி"யின் இதழ்களைத் தொடர்ந்து படித்து வருகின்றேன், "பொன்னி"யின் தொண்டு போற்றுதற்குறியது. 'பொன்னி' தமிழுக்கு தமிழ்க் கவிஞர்களுக்கு, பேராசிரியர்களுக்கு..........என்று இடம் வகுத்து, கட்டுரைகள், கதைகள், பாடல்கள்என்றுவாரிவழங்குகிறது சிறுவர்களுக்குக்கூடத் ஒரு தனிப் பகுதி யிருக்கிறது. ஆனால் பெண்களுக்கென்று ஒரு பகுதி—மூன்றும ஆண்டுத் தொடக்கத்திலிருந்து —இணைத்திருந்தால் எவ்வளவோ நன்றாக இருக்கும் என்பது என் எண்ணம்.

K. சிவானந்தவல்லி

பொள்ளாச்சி-28-2 49

'பொன்னி' பொங்கற் புதுமலர் கண்டோம். மகிழ்ச்சி விண்டோம். 'பொன்னி'யைப் பார்க்கச் சேராத நண்பர் எல்லாம் சேரக்கண்டோம். இதனால், எங்கள் நெஞ்சை அள்ளி விட்டது "பொன்னி" எனப் பொங்கும் மகிழ்வில் வாழ்த்துகின்றோம். புத்தாண்டு முதல் 'பொன்னி' புதுப் பொலிவுடன் சிறக்க வேண்டுகிறோம். "பொன்னி" தமிழருக்கு ஓர் கன்னல்!

வ. பா. அங்கலாஞ் செட்டி



சிறுவர் அரங்கம்

சுண்டெலிகளின் வெற்றி

-சிப்பி-

பண்ணைக்காட்டு சட்டசபை கூடியது. காடெங்கும் இதே பேச்சு. ஒரே அமர்க்களம். காரணம் புதிய சட்டம் செய்ய அன்று விவாதம் நடக்கப்போகிறது. காட்டுக் கோயில்களில் நடைபெறும் அக்கிரமங்களைத் தடுத்து, அங்கு வேலை செய்யும் கோயில் பெருச்சாளிகளைச் சரியான நிர்வாகம் மூலம் அடக்கியாண்டால்தான், கோயில் சொத்துக்களைப் புனிதமாகக் கருதிவரும் பொதுமக்களான சுண்டெலிகளுக்கு மகிழ்ச்சியளிக்க முடியும் என்பதே அச்சட்டத்தின் நோக்கம்.

ஒரு நாள் பகலில் சிங்கராஜா காடுகளைப் பார்வையிட்டார். கோயில்களில் ஏராளமான உணவுப் பொருள்கள் இருந்தும் பூஜைக்குப் பயன்படாமல் பெருச்சாளிகளே சாப்பிட்டு வந்தன. கடவுளின் விலையுயர்ந்த உடைகளையும் நகைகளையும் அவைகளே அனுபவித்தன. இவைகளை மிரட்டி மடாதிபதிகளான பூனைகள் ஏகபோகமாக வாழ்ந்தன. ஆனால் பக்தர்களான சுண்டெலிகள் சொத்துக்களைக் கோயிலுக்களித்ததல்லாமல் வேறு பலனை அனுபவிக்கவில்லை. இந்த அக்கிரமத்தைச் சிங்கராஜா கண்ணால் கண்டும், காதால் கேட்டும் அறிந்து கொண்டார். பிறகுதான் இதைத் தடுக்கச் சட்டம் கொண்டுவந்தார்.


அதை யாரும் விசேஷமாகக் கருதவில்லை. அது அரசரின் கடமை, அதை அவர் செய்கிறார் என்று இருந்துவிட்டனர். ஆனால் சிங்கராஜாவை ஒரு உருத்திராட்சப் பூனை எதிர்த்தது. எங்கும் பரபரப்பு உண்டாகிவிட்டது. அதனால் தான் சட்ட சபையில் அமளி. இல்லாவிட்டால் சட்ட சபை தூங்கிவழியும்!

சட்ட சபை கூடியது. சிங்கராஜா ஒரு தந்திரம் செய்தார். பூனையைப் போலத்தானே புலியும்! புலியைச் சட்டத்தை ஆதரித்துப் பேசச் சொன்னால் பூனை அடங்கிவிடும் என்று நினைத்துப் புலியைப் பேசச் சொன்னார். புலி எழுந்து சீறிற்று. பூனையும் தானும் ஒரே நிறமல்லவா

என்று பரிதாபப்பட்டுப் பூனையைத் தன் கட்சிக்கிழுக்கப் பார்த்தது. பூனை அதற்கெல்லாம் இசையவில்லை. கண்ணாடி விழியை விழித்துக்கொண்டும், பகலிலேயே கூடக் கண்ணை மூடிக் கொண்டும், கையிலிருந்த உருத்திராட்ச மாலையை உருட்டிக் கொண்டுமிருந்தது.

சபை ஒழுங்காக நடக்கவும், சபை அங்கத்தினர்களுக்குப் பாதுகாப்பளிக்கவும் அங்கிருந்த சபைத் தலைவர் நாய், பூனையைப் பேசச்சொன்னார். பூனை எழுந்து தன் பூப்போன்ற பாதத்தால் முகத்தைத் துடைத்து, மீசையிருந்த இடத்தைத் தடவிக் கொண்டு பேச ஆரம்பித்தது.

"கோயில்கள் புனிதமானவை. அதைக் குறை சொல்வது பாபம். அதிலும் அங்கு சேவை செய்யும் பெருச்சாளிகளைத் தூற்றுவது மகாக் கொடுமை. நான் சுண்டெலிகளுக்கு விரோதியல்ல. பெருச்சாளிகளுக்காகப் பேசவரவில்லை. இருவரும் எனக்கு ஒரே மாதிரிதான்! நான்



கோயில், மடத்தலைவர்கள் சார்பாகப் பேசுகிறேன். ஏன்? அவர்களுக்கு இங்குப் பிரதிநிதித்துவமில்லை. இதோ பெருச்சாளிகள் வெளியிட்டிருக்கும் ஓலைச் செய்தியைப் படிக்கிறேன் 'இச்சட்டம் எங்களது ஜீவ மரணப் போராட்டமாகும். எங்களுக்கும் பூனையாருக்கும் உள்ள உறவு எப்படியிருந்தாலும், நாங்கள் கோயிலிலும், மடங்களிலும் சேவை செய்து சுகமாக வாழ அவர் விரும்புகிறார். அவரை நாங்கள் வரவேற்கிறோம்!' இதன் மூலம் எனக்குப் பெருச்சாளிகளின் ஆதரவு மனப்பூர்வமாயிருக்கிறது என்பது உறுதியாகிறது. இது மட்டுமல்ல. இச்சட்டத்தைக் கேள்வியுற்றதும் பட்டினியாக இருந்து வாடும் புலிக்குட்டியினரைப் பாருங்கள்.''

சுண்டெலிகளின் பிரதிநிதி:- யாரோ ஒரு அயோக்கியனைப் பற்றிச் சபைக்கு அக்கரையில்லை (சபையில் ஆரவாரம்)

சட்டசபைத் தலைவர் நாய் (எழுந்து) ''ஆர்டர், ஆர்டர் (ஒழுங்கு, ஒழுங்கு)'' என்று குலைத்தது.

அமைதியேற்பட்டதும் பூனை பேச ஆரம்பித்தது. ''உண்ணாவிரதமிருப்பவர் சாதாரணமானவரல்ல, இந்த நாட்டு மதத்தலைவரான புலியாரின் பரம்பரையில் வந்த புலிக்குட்டி.''

இச்சமயத்தில் பொதுமக்களான சுண்டெலிகள் சபைக்குள் நுழைந்து ''நிறுத்து அது புலிக்குட்டி அல்ல பூனைக்குட்டி உண்மை வெளியாகிவிட்டது. புலித்தோல் போட்டுக்கொண்டால் ஏமாறமாட்டோம். பூனை ஒழிக! பூனை ஒழிக!'' என்று கூச்சலிட்டனர்.

சபைத்தலைவர் நாய் தலையிட்டு ''ஆர்டர், ஆர்டர், ஆர்டர்'' என்று உரக்கக் குலைத்தார்.

சுண்டெலிகளின் பிரதிநிதி:- சிங்கராஜா அவர்களே கனம் அங்கத்தினர்களே! சுண்டெலிகளின் ஆத்திரம் கரை புரண்டு விட்டது. சுண்டெலிகளின் சொத்துக்கள் கோயிலில் முடங்கியிருக்கின்றன. அதைப் பெருச்சாளிகளும், பூனைகளும் சாப்பிடுகின்றன. அவைகளால் கஷ்டமும் நஷ்டமும் அடைந்தவர்கள் சுண்டெலிகள்தான். ஆகவே சுண்டெலிகளின் ஆத்திரத்திற்குச் சிங்கராஜா இடமளிக்கக் கூடாது என்பதோடு இச்சட்டத்தை உடனே அமுலுக்குக் கொண்டுவர உத்தரவுசெய்ய வேண்டுகிறேன்.

சட்டம் நிறைவேறியது. ஆரவாரத்துடன் சபை கலைந்தது.

அழப் பிறந்தவன்

உமாமணி

"அழு, அழு, நன்ருக அழு! அழத்தானே பிறந்திருக்கிருய்! அழப்பிறந்தவன் வேறு என்ன செய்யமுடியும்?" என்று கூறினுன் அந்தக் கிழவன்.

அந்தப் பாழ்மண்டபத்தின் ஒரு மூலேயில் ஒரு இளம் பெண் பிரசவ வேதனேயால் மூர்ச்சையாகிக் கிடந்தாள். அவளருகில் பிறந்த குழந்தை அழுது கொண்டு கிடந்தது. தூரத்தில் இருந்த கிழவன் ஒன்றும் செய்ய இயலாமல் இப்படிச் சொல்லிக் கொண்டிருந்தான்.

சிறிது நேரத்தில் அந்த இளம் பெண் கண்விழித்தாள். தன் அருகில் அழுது கிடந்த குழந்தையை மார்போடு அணேத்துக் கொண்டாள். சட்டென்று அவள் முகம் கருத்தது. வாழவழியற்ற தன் நிலேயை எண்ணினுள் போலிருக்கிறது. மெதுவாக அந்தக் குழந்தையின்கழுத்தருகில் தன் கையிரண்டையும் கொண்டு போனுள். இரண்டு கைகளாலும் கழுத்தை நெரித்தாள்.

எங்கேயோ பார்த்துக்கொண்டிருந்த அந்தக் கிழப் பிச்சைக்காரன், "ஏனம்மா அவனேச் சாகடிக்கிருய். தானுகப் பிறந்தவன் தானுகச் சாகும் வரை அழுது கொண்டிருக்கட்டும். விட்டு விடு!" என்ருன். என்ன நினேத்தாளோ, கையை எடுத்து விட்டாள். மீண்டும் சோர்ந்து விழுந்தாள். கண்கள் மூடிக்கொண்டன.

"அவள் ஏன் தான் பெற்ற குழந்தையைக் கொல்லவேண்டும?"

மீனு மேட்டுக் குடியில் பிறக்கவில்லேயென்ருலும் தாய் தந்தையரின் ஒரே செல்வக் குழந்தை. தாயும் தந்தையும் கூலி வேலே செய்து மீனுவை அன்பாக வளர்த்து வந்தார்கள். ஒரே பெண்ணுதலால் அவள் விருப்பப்படி தங்களால் ஆனதைச் செய்து வைத்தார்கள். ஒருநாள் பக்கத்தூரில் நடந்த கூத்துக்குப் போய் வந்தாள் மீனு. காலேயில் கூத்து முடிந்ததும் தன் குடிசைக்குத் திரும்பினுள்.

யார் வைத்த தீயோ? குடிசை வெந்து தணிந்திருந்தது. சாம்பலும் கரியுமாக நின்றது. அதோ அவள் தாயும் தகப்பனும் எலும்புருவாகிக் கிடந்தனர். ஒரே இரவில் அவள் ஏதுமற்ற அனுதையானுள். தேற்றுவாரில்லே. கால்போன போக்கில் அழுது கொண்டே போனுள்.

பக்கத்திலிருந்த அந்தப் பட்டணத்திற்குள் நுழைந்த போது உலகம் இருட்டிக் கொண்டு வந்தது. மீனு நடந்து கொண்டே இருந்தாள். அங்கே பூந்தோட்டம் வந்தது. அங்கே ஒரு மரத்தடியில் சுருண்டு படுத்த மீனு அழுது கொண்டே தூங்கி விட்டாள். நடுநிசியிருக்கும், மீனு சற்றுக் கண்திறந்தாள். பால்நிலவு பூஞ்சோலேயில் படிந்து அதைப் பொன்

னுலக மாக்கியது. இந்தக் காட்சி மீனுவுக்கு இன்பத்தைக் கொடுத்தது போலும். எழுந்து பூஞ்சோலை முற்றும் சுற்றிப் பார்த்துக் கொண்டு வந்தாள். ஆம். அவள் கவலையை மறக்கச் செய்தன அந்த அழகுப் பூஞ் சோலையும் எழில் நிலவும்.

அப்பொழுது "யாரங்கே?" என்ற அதட்டலுடன் ஒரு கிருதா மீசைக்காரன் வந்தான். மீனு பயந்து விட்டாள். அவன் அவள் அருகில் வந்ததும், "ஐயா ஏழை! இருக்க இட மில்லை!" என்று பணிவாகக் கூறினுள்.

"பாவம்! அம்மா இங்கே பனியாக இருக்கும். வாநம்ம வூட்டுக்குப் போகலாம்" என்ற தோட்டக்காரனின் குழைவு உண்மையிலேயே மீனுவுக்கு வியப்பளித்தது. கடவுளே தனக்கு அடைக்கலம் கொடுத் திருக்கிருர் என்று நினைத்துக் கொண்டு தோட்டக்காரன் பின்னே நடந்தாள். ஆனுல் வீட்டுக்குள் சென்ற பிறகு தான் அவன் தன் இளமைத் தேனை யுறிஞ்ச வந்த காட்டு வண்டு என்பது புரிந்தது. புரிந்தென்ன செய்ய?

நடந்தது நடந்து விட்ட தென்று அவனிடமே இருந்து வந்தாள் மீனு. இரண்டு மூன்றுநாட் சென்றதும் தன்னை மணந்து கொண்டு இன்ப வாழ்வு நடத்தும்படி அவனை வேண்டினுள். 'ஊர்பேர் தெரி யாத கழுதைக்குக் கலியா ணமோ?' என்று அவன் அவளை விரட்டியடித்து விட்டான்.

பின் பிச்சையெடுத்து வயிறு வளர்ப்பதை விட ஆண்களின் இச்சையைத் தீர்த்து வாழ் வது எளிதென்றெண்ணிய மீனு நாளைக்கொரு ஆடவர்க்கு உடற் பசியைத் தணித்து வேளைதோறும் பசியெடுக்கா மலே உண்ணும் நிலைமையை ஏற்படுத்திக் கொண்டாள்.

பாழ்மண்டபத்திலிருந்து பங் களாவரை வளர்ந்தோங்க வேண்டிய இத்தொழில் ஏனோ மீனு விஷயத்தில் வளங்குன்றி விட்டது. எத்தனையோ முறை குழந்தைகள் உருவாகாமல் தடுத்து வந்த மீனுவைக் கடை சியில் அவள் வயிறு எந்த மருந்திற்கும் கட்டுப்படாமல் ஏமாற்றி விட்டது.

அப்படிப் பிறந்த குழந்தை யப்பன் இப்படி அழு அழு வென்று கிழவன் ஆசீர் வதிக்க அந்தப் பாழ்மண்டபத் தில் அழுது கொண்டிருந்தான்.


கொஞ்ச நேரம் சென்றதும் மீனு கண்விழித்துப் பார்த் தாள். குழந்தை அழுது கொண்டுதான் இருந்தது. தூரத்தில் இருந்த கிழவனைக் காணேம்.

"தானுகப் பிறந்தவன் தானு கச் சாகும் வரை அழுது கொண்டிருக்கட்டும் விட்டு விடு" என்ற அந்தக் கிழவ னின் சொற்கள மீண்டும் அவள் காதில் ஒலிப்பது போலிருந்தது.

அழுது கொண்டிருந்த அந் தக் குழந்தையைப் பார்த்தாள். "அழுது கொண்டே கிட" என்று சொல்வது போல அந்தப் பார்வை இருந்தது. அந்தப் பாழ்மண்டபத்தை விட்டு வெளியேறினுள்.

தூரத்தில் தெரிந்த அந்த எரிப்பக்கந்தான் அவள் போய்க் கொண்டிருந்தாள்.

குழந்தை அழுது கொண்டி ருந்தது.



வேலைக்காரி

"சினிமா உலகமும் சீர்திருந்தும்; மக்களை முன்னேற்றப்பாதையில் அழைத்துச் செல்லும்" என்று நம்பிக்கை கொள்ளும் படியாக, அறிஞர் அண்ணாத்துரையின் கருத்தோவியமான "வேலைக்காரி" திரைப் படமாக உருவாகி இருக்கிறது. மாதக்கணக்கில் நாடகமாக நடிக்கப்பட்டு, தமிழ் மக்களிடையே செல்வாக்குப் பெற்று விளங்கிய கதைதான் "வேலைக்காரி". நெடு நாட்களாக அக்கதையை வெள்ளித் திரையில் காண விரும்பிய அன்பர்களுக்கு, ஜூபிடர் பிக்சர்ஸார் சென்ற பிப்ரவரி 25-ல்தான் அதனை வெளியிட்டிருக்கின்றனர்.

அமிர்தம் வேதாசல முதலியார் வீட்டு வேலைக்காரி; வேதாசல முதலியார் பணத்திமிரும் சாதித் திமிரும் பிடித்தலையும் ஜமீன்தார்; சரசா அவருடைய மகள்; அப்பாவுக்கேற்ற ஆணவமும் ஆடம்பரமும் அவளிடம் குடிகொண்டிருக்கின்றன; மூர்த்தி அவள் சகோதரன்; எனினும் அப்பாவி. வேதாசல முதலியாரின் பணவெறிக்குப் பலியாகிறார் சுந்தரம் பிள்ளை; நெடுநாள் இலங்கையிலிருந்துவிட்டு, அப்பாவைக் காண ஆவலாய் வரும் அவர் மகன் ஆனந்தன், அவரை மரத்தில் பிணமாய்த் தொங்கும் நிலையில் காண நேருகிறது; ஆனந்தன் வேதாசல முதலியாரைப் பழி வாங்க எண்ணுகிறான்; திட்டம் தருகிறான் அவன் நண்பன் மணி; ஆனந்தன், பரமானந்தன் ஆகி மேவார் விலாசத்தில் குடிபுகுந்து, வேதாசல முதலியாரின் மகள் சரசாவையே மாலையிட்டு மணந்து கொள்ளுகிறான்; பிறகு பழிவாங்கும் கட்டம் தொடங்குகிறது; பரமானந்தனின் கெடுபிடியில் வேதாசல முகலியார் பம்பரமாய் ஆடுகிறார். இதற்கிடையில் மூர்த்தி, அமிர்தம் காதல் வளர்கிறது; முதலியார் காதுக்குத் தகவல் எட்டவே மூர்த்தி வீட்டை விட்டு வெளியேற்றப்படுகிறான்; அமிர்தம் திக்கிரையாகிறாள். மூர்த்தி ஹரிஹரகோஷ் ஆஸ்ரமத்தில் சேர அங்கு அத்துறவியின் கோலாகல வாழ்க்கையைக் காண நேரிடுகிறது; மூர்த்தியின் கோபாவேசம் ஹரிஹர கோஷ் மரணத்தில் முடிகிறது. மூர்த்தி கொலைக் குற்றம் சாட்டப்படுகிறான்; மூர்த்திக்காக ஆனந்தன் மாறு வேடம் பூண்டு நீதி மன்றத்தில் வாதாடி அவனுக்கு விடுதலை தேடித்தருகிறான்; அமிர்தம் தீ விபத்தில் தப்பி வேற்றூர் செல்ல, பர்மாவிலிருந்து வந்து பைத்தியமாகத் திரியும் பாலுமுதலி கண்ணில் படுகிறாள்; அவர் நடைபாதையில் தான் பறிகொடுத்த, சுகிர்தமென்றெண்ணி, அமிர்தத்தை விடாப்பிடியாகத் தன் வீட்டில் வைத்துக் கொள்ளுகிறார். பாலுமுதலியின் பைத்தியம் தெளிந்ததும், அமிர்தத்தின் பெருந்தன்மையை எண்ணி அவளையே தன் மகளாகக்கொள்ளுகிறார்; மூர்த்தியையே மருமகனாகப் பெறுகிறார் பாலுமுதலி; வேதாசலம் முதலியார் தன் தவறுகளை உணர்

கலையுலகம்

கிறார்; சாதித்திமிர். பணப்பேயாட்டம் ஒடுங்கி, இன்ப வாழ்வு தொடங்குகிறது- இதுதான் கதை.

கதைப் போக்கு பார்ப்போர் மனத்தில் வியப்பலை இடைவிடாது உண்டுபண்ணிக் கொண்டேயிருக்கிறது. பணப்பேயாட்டம், சாதித்திமிர், போலித்துறவு, மூடபக்தி— இவற்றிற்கு ஒன்று சேர்த்துத் தரும் சவுக்கடிதான் அண்ணா தந்துள்ள "வேலைக்காரி" கதை.

நாடகத்தினின்றும் சினிமாவாக மாற்றும் போது எத்தனையோ சங்கடங்கள் எழுவதுண்டு; எவ்வளவு முயன்றும் நாடகமாக நடிக்கப் பெற்றகதைகளில் சினிமாவாக ஆக்கப்பெற்ற பின்னரும் 'நாடக மேடை'ப் போக்கு அவற்றில்தொத்திக் கிடப்பதை நாம் கண்கூடாகக் கண்டுவருகிறோம்; ஆனால் இவ் "வேலைக்காரி" யைப் பொறுத்த வரையில் அக் குற்றம் கூற முடியாதபடி டைரக்டர் ஏ. எஸ். ஏ. சாமி கவனம் செலுத்தி யிருப்பது பாராட்டத்தக்கது. முதன் முதலில் "வேலைக்காரி"யை அறிமுகம் செய்யும் முறை குறிப்பிடத் தக்கது; அவசரப்படும் ஆனந்த்துக்கு மணி கூறும் ஆலோசனை "இடைவேளையை" ப் படத்திற்கும் இடைவேளையாக்கியது புதுமை. அறிஞரின் கதைச் சிறப்புக் கேற்ப, டைரக்டர், ஒத்துழைத்து வெற்றி கண்டிருப்பது மகிழ்ச்சிக் குரியதாகும்.

நடிப்பில் முதற்பரிசு மணியாக நடிக்கும் டி. எஸ். பாலையாவுக்கே போய்ச் சேர்கிறது; அவர் தம் பாகத்தைக் கனகச்சிதமாய் நடித்து முடித்திருப்பதோடு தனிப்பட நகைச் சுவைப் பகுதி வேண்டியதில்லை யென்னுமளவுக்கு 'ஆனந்த விருந்து'. அளிக்கிறார்; அடுத்தபடியாக வேதாசல முதலியாராக நடிக்கும் பாலசுப்பிரமணியன், வேலைக்காரியாக நடிக்கும் எம். வி. ராஜம்மா, சரசாவாக நடிக்கும் வி. என். ஜானகி ஆகியோரைக் குறிப்பிடலாம். வி. என், ஜானகி நடிப்பதோடு அருமையான நாட்டிய விருந்தும் அளிக்கிறார்.

லலிதா பத்மினி நடனம் படத்தின் முக்கியப்பகுதி என்று கூறவேண்டியதில்லை. ஆனந்தனாக நடிக்கும் கே. ஆர். ராமசாமி பரமானந்தனாக மாறிய பின்னர்தான் உண்மையிலேயே நடிக்க ஆரம்பித்திருக்கிறார் என்று சொல்லவேண்டும்; வழக்கு மன்றத்தில் அவர் வாதாடுவதும்; தன் மாமனாரோடு வம்பளப்பதும்; காளி அநீதியைக் கண்டு அவர் ஆவேசம் பெறுவதும் குறிப்பிடத் தக்க இடங்கள். மூர்த்தியாக நடிக்க வேறொருவர் அகப்படாமற் போனது விந்தைதான்; சரசாவின் அண்ணன் என்றோ, அமிர்தத்தின் உள்ளத்தில் குடிபுகுந்த மணிவண்ணன் என்றோ படத்தில் வரும் மூர்த்தியை யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள்; அப்பாவிக்கு எடுப்பான முகத்தோற்றம் கூடவா இருக்கக்கூடாது? பாடல்கள் பொருள் விளங்கும்படியாக, பின்னணி இசையில் மங்கிவிடாமல் ஒலிப்பதிவு செய்யப்பட்டுள்ளன. கருத்துச் சிறப்புள்ள பாடல்கள் என்றாலே, இயற்றியவர் உடுமலைநாராயணக்கவி என்பது சொல்லாமல் விளங்கும்; "உலகம் பலவிதம்" என்ற பாடல் குறிப்பிடத் தக்கது.

அண்ணாவின் வசனம் படம் முற்றும் நிறைந்திருக்கிறது. எப்பகுதி சிறப்புஎன்று எடுத்துக் காட்ட இயலாது; ஒவ்வொரு கட்டத்திலும் தமிழகத்தின் பெர்னார்ட்ஷா தம் கைவரிசையைக் காட்டியிருக்கிறார்; ஜூபிடர் பிக்சர்ஸார் புகழ்பெற்ற நாடகத்தைத் தக்கவிதத்தில் மாறுதல் செய்து பெரும் புகழைத் தட்டிக்கொண்டு போய்விட்டார்கள்; இனிமேலும் வெள்ளித்திரை புராணக் குப்பை மேடாக முடியுமென்று யாரும் எண்ணமுடியாத அளவு "வேலைக்காரி" வெற்றி பெற்று விட்டாள்.

மாணவர் மன்றம்

கேள்வி எண் 1.

கிடைத்துள்ள விடைகளில் சிறந்தவை வெளியிடப்படுகின்றன.

(பரிசு பெற்றவர்)

நாகபட்டணம் தேசீய உயர்நிலைப்பள்ளி இரா. சவுந்தரராசன் (IV படிவம்)

வழிபாட்டுக் கூட்டத்தில் பல பிரிவுகள் உண்டு அவை இறை வழிபாடு, தாய்மொழி வழிபாடு, தாய் நாட்டு வழிபாடு, பெரியார்கள் வழிபாடு முதலியன. கூட்டத்தின் குறிக்கோள், நிலைமை, தன்மை இவற்றிற்கியைந்தவாறு மேற்கூறிய வழிபாடுகளில் ஒன்றைப் புரிதல் வேண்டும் குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட ஒன்றின் மேல் மனதை நிலைபெறச் செய்வது வழிபாட்டுக் கூட்டத்தின நடைமுறையாகும்.

கரூர் உயர்நிலைப்பள்ளி ப. முத்துசாமி (V படிவம்)

வழிபாட்டுக்கூட்டத்தின் இன்றைய நடைமுறைக் கொள்கைகள் மக்களால் ஏற்றுக்கொள்ளப்படாததும் வெறுக்கப்படுவதுமான ஒன்று. வாழ்விழந்த மக்களை வாழவைக்க, சீரிழந்த நாட்டைச் செம்மையுறச் செய்ய, அறியாமையில் கிடந்துழலும் மக்களை அறிவுப் பாதையில் திருப்ப வழிபாடுகள் நடப்பதில்லை. தங்களின் கோட்பாடுகளை, கொள்கைகளை நாட்டினரிடையே பரப்பி தங்கட்கு வேண்டியதைச் சாதித்துக்கொள்ளும் ஒரு கருவியாக உபயோகப்பட்டு வருகிறது வழிபாடு. வள்ளுவனுக்கு வழிபாடு என்றால் அவர் வாழ்வுக்கு இலக்கணம் வகுத்தார் என்பதற்காக. மனுவுக்கு, மாந்தாதாவுக்கு வழிபாடு எனின் நமது மானம் விலைபோகிறது என்பதுதானே அதன் பொருள்.

.... இங்கே கத்தரிக்க ....

கேள்வி எண் 2

சமுதாயத்தின் நடைமுறையிலே நேர்மைக்கு உள்ள மதிப்பென்ன?

மு. சருவமலை V. F — நா. க. உயர்நிலைப்பள்ளி, நாமக்கல்

விடைகள் கூபனோடுதான் அனுப்ப வேண்டும். அத்துடன் மூன்று புதிய கேள்விகளும் எழுதியனுப்ப வேண்டும். விடை 50 சொற்களில் அடங்குதல் வேண்டும்.	பெயர் ....
	வகுப்பு.............வயது.........
	பள்ளி ....
	ஊர்............................
முடிவு நாள் 20—3—49	தேதி.............கையெழுத்து